தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | தி. பி. 2013 துலை 21 (7 - 11 - 1982) இதழ் எண் : 1 | பகுதி 1

தமிழர்களிடையே ஒரு வரலாற்று மறுமலர்ச்சி உருவாக வேண்டும்!

உ. த. மு. க. உண்மை கழகம்!

லகத் தமிழின முன்னேற்றக் கழகம்
உண்மைக் கழகம் பாருங்கள்!—இதில்
உறுப்பினராகச் சேருங்கள்!—அதற்கு
உங்கள் துணையைத் தாருங்கள்!—அதன்
உழைப்பை எவர்க்கும் கூறுங்கள்!
கூறுங்கள் கூறுங்கள்!

லவும் சாதி மதங்களை எல்லாம்
நில்லா தறவே தொலைப்பது!—அது
நின்று விளங்கும் செந்தமிழ்—மொழியை
நிலத்தில் எங்கும் விளைப்பது!—அது
நேர்மைத் தொண்டில் தழைப்பது!
தழைப்பது! தழைப்பது!

அரசியல் பூசல் இழிவுக ளெல்லாம்
அறவே தவிர்க்க முயல்வது!—உண்மை
அறத்தை என்றும் பயில்வது!—உயர்
ஆளுமை நெறியோ டியல்வது!—முறை
யற்றவர் சீய்க்கும் புயல்அது!
புயல்அது! புயல்அது!

வாய்க் கள்வாய் ஏழையைச் சுரண்டும்
கயவரை அழிக்கும் வாளாகும்!—அவர்
கயமைகள் இதன்முன் தூளாகும்!—ஏழைக்
கனவுகட குரிமைத் தாளாகும்!—அவர்
கடமைகட் குழைக்கும் ஆளாகும்!
ஆளாகும்! ஆளாகும்!

யற்கை வளங்கள் விளைவுகள் எல்லாம்
எவர்க்கும் பொதுமை எனக்கூறும்! — இதற்
கெழுதுக சட்டம் எனக்கோரும்!—மக்கட்
செல்லா நலன்களும் மிகச்சேரும்!—எனவே
இணைத்துக் கொளவீர் உடன்வாரும்!
உடன்வாரும்! உடன்வாரும்!

ற்கை செய்யும் கழிசடை, காம
மலிவுக் கலைகளைக் கட்டழிக்கும்!—அவை
மனங்கொள் வாரைச் சுட்டெரிக்கும்!—தமிழ்
மானமி லாரை விட்டொழிக்கும்!—இன
மலர்ச்சிக் கென்றே கெட்டுயிர்க்கும்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

அதற்காகவே 'தமிழ்நிலம்' தோன்றியுள்ளது!

இதனை எல்லாரும் கட்டிக்காத்திட வேண்டும்!

பாவலரேறு வேண்டுகோள்!

சென்ற ஆண்டு இதே பொழுதில் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' அரும்பியது. இன்று, அதன் செய்தியிதழாகிய தமிழ் நிலம்—கிழமையிதழ்—மலர்ந்திருக்கிறது! ஆம்! ஓராண்டுக் கடுமையான உழைப்பின் விளைவாக, தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் உ.த.மு.க. அமைப்புகள் மலர்ந்து விளங்குகின்றன!

புதிய வரலாறு!

பெரும்பாலான வட்டங்களில் வட்டக்கிளைகள் தோன்றிப் பொலிவுற்றுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் 'தமிழ் நிலம்' தோன்றியுள்ளது! பொருளில்லாமல், அரசியல் நோக்கம் இல்லாமல், வேறு எந்த ஒரு தனிப்பட்ட கட்சியினதும் துணையில்லாமல், அரசினரின் ஆட்சித் தழுவல் இல்லாமல், கள்ளத் தாள்களின் கடைக்கண் பார்வை இல்லாமல், விளம்பரமே இல்லாமல், நேர்மையும், உண்மையும் கொள்கையும் கொண்ட ஓர் உழைப்பியக்கம், இப்படி ஓராண்டிற்குள் 'ஆழ வேரூன்றி அகன்று படருவ தென்பது, வரலாற்றில் நிகழாத செய்கை! ஓர் இயக்கத்தைச் செயல் நடத்துபவர்களுக்கே அதன் உண்மை மதிப்பீடு தெரியும்!

'தமிழ் நிலம்' உ.த.மு.க.வின் கொள்கை இதழாக, செய்தி இதழாக, மாத இதழாக அன்று — கிழமை இதழாக—இனிய, எழில் நிறைந்து, பொருள் பொலிந்த தீம்பெயருடன்—தோன்றியுள்ளது.

இனிக்கும் பெயர்!

ஆம்! 'தமிழ் நிலம்' தோன்றித் தான் விட்டது; இனி, துவங்கி வளர வேண்டும்! ஒரு புதிய வரலாற்றை வரலாற்றுப் புரட்சியை, புரட்சியால் விளையும் மலர்ச்சியை உருவாக்க வேண்டும்!

அப்பொழுதுதான் 'தமிழ் நிலத்'தின் தோற்றத்திற்குப் பொருள் உண்டு! அதன் எழுச்சிக்கு ஓர் உள்ளீடு உண்டு!

தமிழ் நிலம்! எண்ண எண்ண இனிக்கும் பெயர்! சொல்லச் சொல்லச் சுவைக்கும் பெயர்! ஏன், தென்மொழியும் அப்படித் தானே!

மொழியும் நிலமும் இன்றி ஓர் இன மக்கள் எழுச்சியுடனும் உரிமையுடனும் இவ்வுலகின் எந்த மூலையிலும் வாழ முடியாது; வாழவே முடியாது! வெறும் வாய்ப்பந்தல்காரர்களுக்கே, அவ்விரண்டு சொற்களும், அவர்களின் கொள்ளையடிப்புக்குப் பொருந்தாத சொற்களாகப் படும்! ஆனால் ஓர் இனத்தின் எழுச்சி மிக்க வரலாற்றை இழந்து நிற்கும், பீடு குறைந்து பெருமை குலைந்து நிற்கும், நம் தமிழ்மக்களுக்கு அவை இனிக்கும் சொற்களே! உயிரில் உணர்வுச் சிலிர்ப்பை உண்டாக்கும் பொருள் பொதிந்த சொற்களே!

ஒரு வாழ்க்கை!

அப்பப்பா, இவ்விதழைக் கொணர்வதற்குத்தான் எத்தனை அரிய முயற்சிகள்!

இதன் பின்னணி வரலாறு பீடு நிறைந்தது! பெருமை மிக்கது!

பெருமை உடையவர்
ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்!

—என்னும் குறள் இலக்கணத்திற்கே, இலக்கியமாய்ச் சமைந்தது இத் தமிழ் நிலம்!

இதனைத் தமிழர் எனப் பெறுவார் அனைவரும் இரு கை நீட்டி வரவேற்க வேண்டும்!

"தமிழ் நிலம்" ஓர் இதழன்று! ஒரு வாழ்க்கை! தமிழின வாழ்க்கை உரிமையின் வித்து! இது முளை விட்டுக் கிளைவிட்டு வளர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து நல்குதல் வேண்டும்!

இதற்குப் பல்லாயிரக் கணக்கில் உறுப்பினர்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

விலை 65 காசு

கிருட்டிணை நீர்த் திட்டத்தைக் கைவிடுங்கள் !

ஆசிரியர் இறைக்குருவனார்

காவிரியின் இயல்பான போக்கை அணைகட்டித் தடுத்து நிறுத்திக் கொண்டு, தமிழ் நாட்டை, வல்லடி வழக்குப் பேசி மல்லுக்கிழுக்கின்றது கன்னட மாநிலம் !

நீர் நாடென்றும் வள நாடென்றும் பேர்பெற்ற தஞ்சை திருச்சி மாவட்டங்கள் வற்றிய நீர் நிலைகளும் வரண்ட வயல்வெளிகளும் வாடிவதங்கிய பயிரினங்களுமாகிக் கிடப்பது வாடிக்கையாகிவிட்டது !

ஆண்டாண்டு தோறும் தொடரும் இந்த அவலக் காட்சி இந்த ஆண்டில் மிகுதியாகி உள்ளது!

கடந்த பல ஆண்டுகளாகக் கன்னடத்திற்குத் தமிழ் நாடு விடுக்கும் எச்சரிக்கைகளும் எதிர்ப்புக் குரல்களும் எவ்வகைப் பெரும் பயனையும் விளைத்துவிடவில்லை, தமிழ் நாட்டின் முறையீடுகளையும் கோரிக்கைகளையுங் கேட்டு நடுவணரசும் நயன்மை வழங்கவோ நிலையான தீர்வு காணவோ முன் வரவில்லை.

இந்திரா அம்மையாரின் நோக்கம் :

கன்னடத்தின் முறைகேடான அணைத்திட்டத்திற்கு நடுவணரசே மறைமுகமாகத் துணை நிற்கிறது. கன்னடம் உலக வைப்பகத்தின் (World Bank) உதவியைப் பெற நடுவணரசு பரிந்துரைத்திருப்பதோடு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் நேரிடையாகவே பொருள் ஒதுக்கீடும் செய்து உள்ளது!

அன்றும் இன்றும் கருநாடக மாநிலத்தில் இந்திரா பேராயமே ஆட்சிப் பொறுப்பில் இருப்பதும் தமிழ் நாட்டில் திராவிடச் சார்பு கட்சியினரே ஆட்சி வலிமை பெற்றிருப்பதுமே இந்நிலைகளுக்குக் காரணம் !

தனக்கில்லை என்ற பாலைத் தட்டிக் கவிழ்ப்பது போல் தாம் ஆட்சி பெற முடியாத மாநிலத்திற்கு நெருக்கடி நிலையை உண்டாக்கித் தம் அதிகாரச் சாய்காலை நிலைப் படுத்திக்கொள்வது தான் இந்திரா அம்மையாரின் நோக்கம் போலும் !

இந்நிலைகளைக் கண்டு வெட்கித் தலைகுனிய வேண்டிய தேசிய ஒருமைப்பாடு பேசும் தில்லுமல்லுக்காரர்கள் பேச மாட்டாமல் பிட்டுத் தின்று விக்கினாற்போல் நிற்கின்றனர். பல கட்சிக் கூட்டத்திற்குச் சென்று தலையசைத்து வருவதே இவர்களின் பெருந்தொண்டு !

இங்கிருக்கும் தமிழர்கள் சிலர் அடிவயிற்றை எக்கிக் கொண்டு குரலெழுப்பி வேண்டுகோள் கோரிக்கை என்று இரந்து கையேந்தி நிற்பதும், மேன்மை தங்கிய கன்னட அரசு பெரிய மனங் கொண்டு ஏதோ ஒரு வரையறையின் பேரில் சிறிதளவு தண்ணீர் திறந்து விடுவதும் உடனே இவர்கள் வெற்றிப் பெற்று விட்டதாக ஆரவாரப்படுத்துவதும் தொடர் கதையாக நீடிக்கின்றன !

காவிரிச் சிக்கலுக்கு நிலையான தீர்வு...?

இந் நிலையில்......

ஆமை வேக ஆராய்ச்சியும் நத்தை வேக நடவடிக்கையும்

சென்னையின் குடிநீர்ப் பற்றுக்குறையைத் தீர்க்க வீராணந் திட்டத்தை வேண்டாமென்று ஒதுக்கிவிட்டு கிருட்டிணை நீர் வேண்டி ஆந்திர மாநிலத்திடம் அங்காந்து நிற்கிறது தமிழ் நாட்டரசு !

ஆமை வேகத்தில் ஆராயப் புகுந்து நத்தை வேகத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவ நம் கிருட்டிணை நீர்த் திட்டத்திற்கு வித்திட்டவர் இந்திராவே. தமிழ்நாட்டிற்கு ஆந்திரம் கன்னடம், மராட்டியம் ஆகிய மும்மாநிலங்களும் 500 கோடிக் கன அடி. மேனி மொத்தம் 1500 கோடிக்கன அடித் தண்ணீர் தர ஒப்புக்கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அம்மையாரின் நோக்கம் அண்டை மாநிலங்களோடு தமிழ்நாட்டைச் சிக்க வைத்து விட்டுத் தம்முடைய அதிகாரச் சாய்காலைத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்பதாக இருக்கலாம் ! இல்லாவிட்டால் ஆசை மூட்டிப் பேசியதாகவும் இருக்கலாம்.

இந்திரா பொதுக் கூட்டத்தில் (1976) பேசி விட்டுச் சென்றதோடு சரி. இதுவரை எந்த வகை நடவடிக்கையும் இல்லை. அவர் மனம் வைத்திருந்தால் ஆறுவது திட்டத்தில் சேர்த்திருக்கலாம் அப்படியும் அவர் செய்திலர் !

இறுதிப்படாத திட்டத்தின் உறுதிப்படாத செய்தி !

கிருட்டிணையாற்று நீர்த் திட்டத்திற்கு ஆந்திர அரசு தேவையான ஆய்வுகளைச் செய்து, அஃது இறுதியாக்கப் படும் நிலையில் இருக்கிறதாம். இந்த ஆய்வுக்கான செலவையும் தமிழ் நாட்டரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது.

15 ஆண்டுக் காலத்தில் நிறைவேறும் என்று கருதப் படும் இத்திட்டம் உருவா 416 கோடி செலவு மதிப்பீடு கொண்டது. இதில் தமிழ்நாட்டு அரசு உருவா 130 கோடியை ஏற்றுக்கொள்ள வேண்டுமாம். எச்சத் தொகையை ஆந்திரா ஏற்குமாம். இஃது இறுதிப்படுத்தப் படாத திட்டத்தில், உறுதிப்படுத்தப்படாத செய்தி !

ஆனால் இந் நீண்ட காலத்திட்டம் உருவா 1400 கோடியை விழுங்கும் என்று வல்லுநர்கள் சொல்லுகின்றனர்.

திட்டம் ஏற்கப்படுமா ? அப்படியானால் எத்தனை ஆண்டுக் காலத்தில் எவ்வளவு பொருட் செலவில் எவ்வாறு நிறைவேறும் ? என்பது ஒருபுறம் இருக்கட்டும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கிருட்டிணையில் ஒரு வலுவான அணையைக் கட்டிக் கொள்ள ஆந்திர மாநிலம் ஆசைப்பட்டாலும் எதிர்கால நிலை என்ன என்பதை நாம் எண்ணிப்பார்க்கத் தவறக்கூடாது.

வரிந்து கட்டும் தெலுங்கு தேசத்தார்

ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ஆந்திரத்தில் வலுப்பெற்று வரும் தெலுங்கு தேசத்தார் (நடிகர் என். டி. இராமா(ராவ்) கட்சியினர்) இத்திட்டம் இராயல சீமையைப் பாலைநிலமாக்கிவிடுமென்றும் இஃது ஆந்திர மக்களுக்கு இழைக்கப்படும் அறக்கொடுந் தீவினை என்றும் வரிந்து கட்டிக் கொண்டிருக்கின்றனர்.

நிலவியற்கை நீரோட்ட முறைப்படி நம்மை வந்தடைய வேண்டிய காவிரி நீரையே பெறமுடியாமல், நிலையான தீர்வு காண முடியாமல் நடுவணரசும் கண்டும் காணாததுபோல் இருக்கப் பல்லாண்டுக் காலமாக அல்லற்பட்டு வரும் நாம் இனிக் கிருட்டிணையாற்றிலும் ஆழந்தெரியாமல் காலை விடுவது தேவை தானா ? எதிர்காலத்துக்கு ஏற்புடைய தாகுமா ?

உலக வைப்பக உதவி

வீரநாராயணப் பேரேரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொணருந் திட்டம் தமிழ்நாட்டிற்கு ஒரு தன்னிறைவுத் திட்டம். உருவா இருபது கோடிக்கு மேல் இதில் முடங்கிக் கிடக்கிறது. இன்னுஞ் சில கோடி செலவிட்டால் பயன்

(8ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் நிலம்

உ. த. மு க. செய்தியிதழ்
கிழமை வெளியீடு (Weekly)
சிறப்பாசிரியர் :
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

0 இஃது ஓர் உ. த. மு. க. வெளியீடு
0 சென்னையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெளியூர்களில் ஒவ்வொரு காரி(சனி)க் கிழமையும் கிடைக்கும்.

ஒவ்வோரிதழிலும்...
0 உ. த. மு. க செய்திகள்:
0 அரிய வரலாற்றுப் பொருளியல் கட்டுரைகள்:
0 மொழி, இன ஆராய்ச்சிக் கட்டுரைகள்:
0 இன, நாட்டு விடுதலை வரலாறுகள்:
0 கலை, இலக்கியச் செய்திகள், கதைகள்!
0 சூடான நடைமுறை அரசியல் திறனாய்வுகள்:
0 பிற சிறப்புச் செய்திகள்:
... அனைத்தும் இடம் பெறும்!
0 இதழின் அளவு ½ டெம்மி, (16½"×11½")
0 விலை விளக்கம்:

தனியிதழ் 0.65 காசு

ஆறு மாதக் கட்டணம் (26 கிழமைகள்)	18.00 உருபா
ஓர் ஆண்டுக் கட்டணம் (52 கிழமைகள்)	36.00 உருபா

ஐந்தாண்டுக் கட்டணம்: 175.00 உருபா
ஓரிதழ்க்கு 4 உருபா முன் பணம் கட்டக்கூடிய முகவர்கள் எழுதிக் கேட்க!

அல்லது ஓரிதழ்க்கு 50 காசு மேனிக் கணக்கிட்டு, 20 படிகளுக்கும் அதற்கு மேலும், எத்தனைப் படிகள் வேண்டுமாயினும், அப் படிகளுக்குரிய தொகையை முன் பணமாக விடுத்து இதழ்களைப் பெற்றுக் கொள்க.

அமைச்சர்
தமிழ் நிலம்
5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

அந்தமானில்

தமிழினம் அழிகிறது !

செப்டம்பர் 3ஆம் நாள் குப்தாப்பாராவில் ஈரேன் மரூம்தார் என்பவருடைய காடுகளை அழிக்கவும்வீட்டை இடிக்கவும் வருவாய்த்துறை அதிகாரி தாமோதரன் (R.I.) தலையாரி இராய் மற்றும் திரு. வாசு [illegible] கியோர் தலைமையில் காவலர் சிலர் வந்தனர். வந்தவர்கள் தங்கள் பணிகளைத் தொடங்கும் முன்பே நாடாளுமன்ற உறுப்பினர் மனோரஞ்சன் பக்தா என்பவர் தலையிட்டு ஈரேன் மரூம்தாரின் காடுகளையும் வீட்டையும் அழிக்கக் கூடாது என்று சொல்லித் திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆயின் அதே வேளையில் அதே குப்தாப்பாரா பகுதியில் 36 தமிழர்களின் வீடுகள் இராஞ்சிக்காரர்களின் வீடுகள் தோட்டங்கள் யாவும் காவலர் உதவியுடன் கொடுமையாக அடித்து நொறுக்கப்பட்டன. தண்ணிக்காடி பகுதியில் இதே வன்செயலால் எட்டுக் குடும்பங்கள் வீடுகளையும் தோட்டங்களையும் இழந்து தெருவில் நிற்கின்றன.

அந்தமானில் குடியேற்ற முயற்சியைத் தடுப்பது அரசின் கொள்கையாக இருக்குமானால் அதற்காகத் தமிழர்கள், இராஞ்சிக்காரர்கள், வங்காளிக்காரர்கள் என்ற பாகுபாடும் இருக்கக் கூடாது.

நாடாளுமன்ற உறுப்பினர் பக்தா வங்க இனத்தைச் சேர்ந்தவர் என்பதற்காகத் தம் இனத்தவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதும் மற்றவர் என்றால் வாய் மூடி இருப்பதும் சரிதானா? அரசும் ஒத்து ஊதுவது முறையா?

புதுக் குடியேற்றம்

அண்மையில் கிடைத்த செய்தியின்படி நீல் ஆவ்லாக் தீவுகளில் வங்கதேசத்திலிருந்து ஓடிவந்த 300க்கும் மேற்பட்ட குடும்பத்தார் நிலங்களைப் பற்றிக்கொண்டு குடியேறியிருக்கின்றார்கள். அதிலும் இவர்கள் இந்தியக் குடியுரிமை பெறாதவர்கள். வங்க இனத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பக்தா உதவியால் இவர்கள் நலமாக வாழ முடிகின்றது. இவர்களைக் கண்காணிக்கத் திறனற்ற அந்தமான் ஆட்சி தமிழர்கள், இராஞ்சிக்காரர்கள் குடிசைகளை மட்டும் உடைப்பதும் இல்லங்களை அழிப்பதும் முறையாகுமா? சட்டமாகுமா?

உட்பொருள் என்ன?

இந்தியக் குடி மக்களாகிய தமிழர்களுக்கு எதிராகப் பாயும் புலியாகும் அந்தமான் அரசு, பிற இந்தியக் குடி மக்களின் முன் பதுங்கும் பூனையாகலாமா? இதன் உட்பொருள் என்ன? தமிழின அழிப்புத்தானே!

எனவே தீவில் எழுந்துள்ள கொடுமைமிக்க இத்தமிழின் அழிப்பு முயற்சியை அந்தமான் ஆட்சியினரும் அந்தமான் ஆட்சியைக் கட்டி மேய்க்கும் இந்திய ஆட்சியினரும் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். இன்றேல் தீவில் இனப் பூசல்கள் பெருகுவதைத் தடுக்க முடியாது! ★

இந்தோனேசியாவும் பண்டைத் தமிழர்களும்

மு. சிறிராமுலு
(மேடான், இந்தோனேசியா)

(திரு. சிறிராமுலு இந்தோனேசியாவில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளராக இருந்து தமிழ்ப் பணிபுரிபவர். மேடான் மாரியம்மன் கோவில் அறங்காவலர் குழுச் சார்பில் தமிழ்ப் பள்ளி நடத்தியும் தமிழ் விழாக்கள் எடுத்தும் தமிழ் மக்களின் கலை பண்பாட்டு நிலைகளை வளர்த்து வருகிறார்.)

இந்தோனேசியாவிற்கும், தமிழகத்திற்கும் 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்பிருந்து வருகிறது. அக்காலத்திலேயே இந்த இரு பகுதிகளுக்கும் இடையே நல்ல வாணிபம் நடந்தது. அதனால் தமிழ வணிகர்கள் ஏராளமானோர் இந்தோனேசியாவிற்கு வரத்தொடங்கினர்கள்.

இந்தோனேசியத் தீவுகள் செல்வத்தின் சுரங்கங்கள் என தெரிந்துகொண்ட தமிழ் வணிகர்கள், முதலில் வணிக நோக்கத்திற்காகவே வந்தனராயினும், இந்நாட்டு மக்கள் பழகுவதற்கும் நட்புக்கொள்வதற்கும் இனிமையானவர்கள் என்பதை உணர்ந்ததும் இந்நாட்டிலேயே நிலையாகக் குடியேறவும் தொடங்கினர்.

தமிழ்க் குடியேற்றங்கள் :

இந்தோனேசியாவில் தமிழ்க் குடியேற்றங்கள் ஏற்படத் தொடங்கிய முதல் கட்டத்திலேயே நல்லஇடங்களைத் தேர்ந்தெடுத்து அங்குக் கம்பங்களை (சிற்றூர்களை) அமைத்துக் கொண்டு தமிழர்கள் வாழத் தொடங்கினர்.

இன்னும் 'கோசகாரர்கள் கம்பம்' 'கிலிங்காரர்கள் கம்பம்' என்றெல்லாம் இந்தோனேசியாவின் பல பகுதிகளிலும் பழந்தமிழ் வழித்தோன்றல்களின் குடியிருப்புகளைக் காணலாம். பொதுவாக இந்தோனேசியாவில் தமிழர்களைக் கிலிங்காரர்கள் என்றே உள்நாட்டு மக்கள் அழைக்கின்றனர்.

தமிழ்க் கல்வெட்டுகள் :

இந்நாட்டில் குடியேறிய தமிழர்களும், பழங்குடி மக்களும் ஒருவரையொருவர் தெரிந்து போற்றி மதித்து நடந்து கொண்டதினால் நெருக்கமான உறவு ஏற்பட்டு இரு இனத்தவரிடையிலும் வேறு பிரிக்க முடியாத கலை நாகரிகப் பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது. தமிழ்ப்பண்பாடு இந்நாட்டில் அன்று தொட்டே வேரூன்றியுள்ளது. அவ் வடிச்சுவட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சுமத்திரா தீவுக்கு, குறிப்பாக வட சுமத்திராவுக்கு வந்து பாரூசு (Barus) எனும் இடத்தில் பாடிகள் அமைத்துக்கொண்டு கற்பூரம், குங்கிலயம் ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபட்டுச் சிறப்பாக வாழ்ந்து வந்த தமிழர்களின் கல்வெட்டுகள் (தமிழ்க் கல்வெட்டுகள்) இன்றும் காணக்கிடைக்கின்றன.

இப்படி, இந்தோனேசியத் தீவுகளில் சீரும் சிறப்புமாக வாழ்ந்துவந்த தமிழ் வழித்தோன்றல்களுக்கு இடையில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. வணிகப் போட்டியைக் கண்டு அஞ்சாத தமிழன் புதிய சமயமொன்றின் வருகையைக் கண்டு அஞ்சினான்.

தாண காரோ எழுச்சி :

மதம் மாறினால் மொழி போய்விடும்; பண்பாடும் பழக்கவழக்கங்களும் மாறிவிடும் என நினைத்த தமிழர்கள் இந்தோனேசியாவையே தம்மை ஏற்றுக்கொள்ள வைத்த அந்தப் புதிய மதத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். தம் தனிப்பெரும் மொழி, பண்பாட்டு நெறிகளைப் பாதுகாக்கும் பொருட்டுத் தாம் உருவாக்கிய சிற்பக்கலையையும் சீர்மிகு கலைக்கூடங்களையும்கூட விட்டுவிட்டு மலைப்பகுதியாகிய தாணகாரோ (Tanah Karo) எனும் இடத்திற்குக் குடியேறினர். இப்படிக் குடியேறியவர்களில் சேர, சோழ, பாண்டியக் குடும்பத்தினரும் இருந்தனர். புதிய இடத்திற்குக் குடியேறிப்போன இவர்களைப் பழங்குடி மக்கள் 'சிம்பீரிங்' என்கின்றனர். சிம்பீரிங் எனில் கருநிறமுடையவர்கள் என்பது பொருளாகும்.

முக்குலப் பெயர்கள் :

தமிழர்கள் எனும் பெயர் வழக்கிறந்து சிம்பீரிங் என இந்தப் பெயரே இந்தோனிசியாவில் இன்றும் நிலைத்து விட்டது. சேர, சோழ, பாண்டியர் என்ற குலப்பெயர்கள் மட்டும் இன்றும் உயிர் வாழ்ந்திருக்கின்றன. இக் குலப் பெயர்களைக் கொண்டுதான் இவர்களை இன்றும் தமிழர் வழி மாறினர் எனக் கண்டுபிடிக்க முடிகிறது. மற்ற அடையாளங்கள் பெரும்பாலும் மறைந்துவிட்டன எனலாம்.

மலைப் பகுதிகளில் குடியேறிய இவர்கள் அங்கிருந்த பழங்குடி மக்களுடன் ஒன்றி உறவாடியதன் பயனாக அந்த காரோ இன மக்களோடு கூடி, கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் 'பாலுரேன்' எனும் இடத்தில் புதிய அரசமரபைத் தோற்றுவித்ததற்கான தடயங்களும் இப்போது கிடைத்துள்ளன. எனவே இப்பாது சிம்பீரிங்குகளுக்கும் காரோக்களுக்கும் வேறுபாடு காணமுடியாத அளவுக்கு ஒன்றில் ஒன்று கலந்து நிற்கும் நிலை உருவாகிவிட்டது.

தமிழின முத்திரைகள் :

தமிழ்மொழி மறந்துபோய்விட்டது. தமிழ்ப்பண்பாடு சிதைந்துபோய்விட்டது எனினும் ஒருசில பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் இன்றும் நிலைத்துநின்று தமிழினத்தின் முத்திரையைக் காட்டிக் கொண்டுதான் உள்ளன. இதுவே இந்தோனேசியாவில் பழந் தமிழர்களின் கதை. ஆனால் தமிழ்வழித் தோன்றல்கள் இந்நாட்டு மக்களுடன் ஒன்றிக் கலந்து உருவாக்கிய வரலாற்று அடையாளங்கள், கலைப் பெட்டகங்கள்தாம் இந்தோனேசியாவின் தனிப்பெரும் செல்வங்களாகும். அவை இன்றும் காண்போரை வியப்பில் ஆழ்த்துபவையாகும்.

இருந்தாலும் தமிழர்களின் இந்தத் தனி முத்திரைகள் தமிழ்முத்திரைகள் என கூறப்படுவது இல்லை. இந்திய முத்திரைகளென்றே ஏற்றிப் போற்றப்படுகின்றன. இந்தியப் பண்பாடு எனில் அது, இந்திப் பண்பாடு; இந்துப் பண்பாடு; ஆரியப் பண்பாடு என்றே அறிவுறுத்தப்படுகிறது. திராவிடப் பண்பாடு திரையிட்டு மறைக்கப்பட்டு விடுகிறது. தமிழின் வீச்சு, சமசுக்கிருதப் பாய்ச்சலினால் மறைக்கப்படுவதோடு மட்டுமன்று, மறுக்கப்பட்டும் விடுகிறது.

நாடு இன்மையால் வந்த கேடு :

காரணம், தமிழினத்திற்கென ஒரு தனிநாடு இன்மைதான். ஆண்ட தமிழினம் இன்று யார் யார் அடியிலோ அண்டிக்கிடப்பதால் நம் பழம்பெருமைகள் பாரதமெங்கும் பதிந்திருக்கும் நம் வரலாற்று முத்திரைகள், எங்கெங்கோ வாழ்கிற மரபு வழியினரின் உரிமைகள் மறக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன.

அவற்றைப் பாதுகாக்க வேண்டுமெனில், நமக்கென்று ஒரு தனிநாடு இன்றியமையாதது என்பதைத்தான் இந்தோனேசியாவின் தமிழ்த்தடயங்கள் பறைசாற்றுகின்றன. இன்றும் இந்தோனேசியாவில் ஏராளமான தமிழர்கள் வாழ்ந்திருந்தாலும் தம் பண்டைப் பெருமைக்குச் சொந்தக்காரர்கள் எனக் கூறிக்கொள்ள முடியாத வெட்ககரமான நிலையிலேயே இருக்கின்றோம். உரிமைத் தமிழ்நாடு ஒன்று உருவாகும் வரை பாரில் எங்கு வாழ்ந்தாலும் பதம் திரு இரண்டுமில்லை தமிழனுக்கு.

நாம் சாக அணியமா (தயாரா)னால் நாடு கிடைக்கும். இடையிலே வெள்ளைக்காரர்கள் நம் உள்ளத்திலே ஏற்றி விட்ட கூலி மனப்பான்மையோடு நாம் வாழ நினைத்தால் மானமும் மதிப்பும் போய்விடும். பிறகு நாடு கேடுறும் என்பதை நான் சொல்ல வேண்டுமா என்ன?

(நன்றி: "அந்தமான் முரசு" 11.9.'82)

குமுகாய உளவியல் :

ஆணும், பெண்ணும், உளவியல் வேறுபாடுகள் உண்டா?

வேலையைப் பொறுத்த அளவிலோ, குமுகாய வாழ்விலோ, குடும்பத்திலோ ஆண், பெண்பாலாரிடையே எவ்வகையான வேறுபாடுகளும் இருக்கக்கூடாதெனப் பலர் கருதுகின்றனர்; குழந்தைகளை வளர்ப்பதிலும் பால் பாகுபாடுகள் காட்டக்கூடாதென்றும், எல்லா வகையிலும்—நடத்தைப் படிவங்கள், மன உணர்வுகள் தொடர்பானவை உட்பட—இருபாலரையும் ஒரே வகையாகத்தான் குமுகாயம் நோக்க வேண்டுமென்பதும் அவர்களது கருத்து.

அப்படியானால் தற்போதய நாகரிக வளர்ச்சிப் போக்கின் திசைவழி எது? ஆண், பெண் பாலாரிடையே சமநிலை என்ற பெயரால் எல்லா வேறுபாட்டுக் கண்ணோட்டமும் அகற்றப்பட்டு விடுமா? அவ்வாறாயின் அது நன்மை பயக்குமா? அல்லது ஒருமையானதா?

பால் வேறுபாடு ஏன்?

உயிரினப் படிநிலை வளர்ச்சியில் ஆணினம், பெண்ணினம் என்ற பாகுபாடு தோன்றிற்று. அதன் விளைவாக, அவற்றின் சூழ்நிலைக்கும், வாழ்க்கைக்கும் ஏற்ப, தம்மைத் தக அமைத்துக் கொள்வதற்குப் பல சார்பு நிலைகள் தோன்றின. எனவே படிநிலை வளர்ச்சியின் போது, பால் வேறுபாடுகள், தோற்றத்திலும், நடத்தைப் படிவத்திலும், "தன்மை"யிலும் நிறைவுற்றன.

இவ்வகை வேறுபாடுகள் அனைத்திற்கும் நாளமில் சுரப்பிகளும், அவற்றின் சுரப்புகள் மூளை அமைப்புகளின் மீது செயல் செய்வதுந்தாம் காரணம் என்பது ஆய்வுகளின்போது தெரியவரலானது. ஆனால், மக்கள் இனத்தைப் பொறுத்த மட்டில், வேறுபாடுகளின் உள்ளடக்கம், உயிரின நிலைகளினால் ம்ட்டுமே அல்லாது குமுகாய, பொருளியல், பண்பாட்டு நிலைகளினாலும் வரையறுக்கப்படுகிறது.

மாந்தன் தனது பங்கைத் தேர்ந்தெடுக்கிறான்

உடனடியாக எத்தகைய சூழ்நிலையில் ஒரு குழந்தை வளர்கிறது என்பதைப் பொறுத்து, அது தன்னை அறியாமலேயே ஒரு நடத்தைப் படிவத்தைப் பெறுகிறது. பொதுவாக, அந்த அந்தப் பாலினத்திற்குரிய நடத்தைப் படிவத்தை ஒரு ஆணோ, பெண்ணோ பெறும்போது, அதைக் குமுகாயம் ஏற்றுக் கொள்கிறது. அது மாறுபட்டு இருந்தால், அதனைக் கண்டிக்கிறது. எடுத்துக் காட்டாகப் 'பெண்களைப் போல ஏன் உட்கார்ந்து அழுது கொண்டு இருக்கிறாய்?' என்று ஒரு சிறுவனிடமும், 'ஆண்களைப் போல ஏன் துடுக்குத்தனமாக இருக்கிறாய்?' என்று ஒரு சிறுமியிடமும் பிறர் கேட்பதை நாம் பார்க்கிறோமில்லையா?

ஆணின் உயிரியல் பங்குதான், அவனது நடத்தையை அடிப்படையில் வரையறுக்கிறதென்றாலும்கூட, குமுகாயச்சூழ்நிலையே அதனை வலுப்படுத்துகிறது. ஒரு குழந்தை வளர வளரத்தான் இன வேறுபாட்டின் உணர்வு அதனிடம் கூர்மைப்படுகிறது. அதன் நடத்தைப் படிவமும் தெளிவாக வெளிப்பாடடைகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

ஒய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 7-11-82—இதழ் எண்: 1 | பகுதி 1

காவிரி நீர் விடாத கருநாடகமும்

தட்டிக் கேட்காத நடுவண் அரசும்!

தமிழ்நாட்டுக்குக் கருநாடகம் தண்ணீர்விட மறுக்கிறது! காவிரி நீர் ஆற்று நீர் பங்கீடு பற்றி 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் மீறப்படுகிறது!

காவிரியாறு தமிழர்களின் வாழ்வில் ஒன்றியது; பின்னிப் பிணைந்தது! காவிரியாற்று நீரால் கொழிக்கும் தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் வறண்டு கிடக்கின்றன.

நீண்ட நெடுங்காலமாகத் தமிழகத்திற்குப் பயன்பட்டு வந்த காவிரி நீரில், கருநாடகம் கட்டுப்பாடு செய்வது, நடுவண் அரசின் நீர், ஆணைக்குழுவின் கட்டளையை மீறுவதாகும்.

இதற்குத நடுவண் (தில்லி) அரசு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டிற்குத் தண்ணீர்விட மறுக்கும் கருநாடக அரசின் முரட்டுக் கொள்கையைத் தவிர்த்திடக் கட்டளை இடவேண்டும். ஆனால் தில்லி அரசு வாய் பேசாமல், தமிழகத்திற்கும் கருநாடகத்திற்கும் நடக்கும் இந்த நீர்ப் போராட்டத்திற்குத் தீர்வு காணாமல், பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்த ஊமைத்தனம் அது பேசி வரும் தேசியக் கொள்கைக்கு முரணானது! அக்கொள்கை; செயலுக்கு உதவாத ஓர் ஏமாற்றுக் கொள்கை என்பது வெட்டவெளிச்சமாகியதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்!

இதேபோல் கருநாடகத்திற்கும் தமிழகத்திற்கும் மொழி வழியாகவும் பல சிக்கல்கள் உண்டு. கருநாடகத்தில் குடியேறிய தமிழர்கள் கன்னடம் படிக்கக் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். ஆனால், இது கூட ஒரு வகையில் தவறில்லை. ஒரு மாநிலத்தில் வாழ்கிறவர்களை அந்த மாநில மொழியைப் படியுங்கள் என்று கூறுவது ஓரளவு ஒப்புக்கொள்ளக் கூடியதே! ஆனால், அவர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழைப் படிப்பதற்கும் தடையிடப்படுகிறதே! அஃது எந்த வகையில் நயமாகும்? சரியாகும்? நேர்மையாகும்!

தில்லியாட்சி, மாநிலங்களுக்குள் ஒற்றுமையை வளர்த்து நலன்களைப் பரவலாக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் தான் வரவேற்கப் பெறுகிறது! அது மாநிலங்களுக்குள் வேறுபாடுகளை வளர்ப்பதானால், அல்லது உருவாகும் வேறுபாடுகளைத் தீர்ப்பதற்குப் பயன்படவில்லையானால், அதன் தேவை நமக்கெதற்கு? அதற்கு ஏன் நாம் அடிமையாக வேண்டும்? தமிழர்கள், தேசியம் பேசும் தமிழ் நாட்டுத் தமிழினத் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்!

தில்லியாட்சி, தென் மாநிலங்களிடையே ஒற்றுமையை உண்டாக்கப் பாடுபடவில்லை. வேற்றுமைகளை வளர்க்கவே, அல்லது வளர்கின்ற வேற்றுமைகளை மேலும் மேலும் தீவிரப் படுத்துவதற்கே மறைமுக முயற்சி செய்கிறது. பிரித்தாளும் சூழ்ச்சியை அது கையாளுகிறது. அதன் வழியாக, அது தன் தேவையை உறுதிப்படுத்துகிறது; தன் நாட்டாண்மையைக் காலங் காலத்திற்கு நீட்டித்துக் கொள்ள விரும்புகிறது. தில்லி ஆட்சி என்பது முழுக்க முழுக்க ஆரியப்பார்ப்பனர்களின் ஆட்சியே! அல்லது அவர்களுக்குச் சார்பான வடஇந்தியர்களின் ஆட்சியே!

இதனை இங்குள்ள இளிச்சவாய்த் தமிழர்கள் இனிமேலாவது எண்ணிப்பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். இல்லையெனில் கருநாடகத்திடம் தண்ணீர், கேரளாவிடம் மின்சாரம், ஆந்திராவிடம் அரிசி, தில்லியிடம் வரட்சிக் கால உதவி என்று பலவற்றுக்கும் கையேந்திக் கொண்டே தான் கடைசி வரை காலங்கழிக்க வேண்டியிருக்கும். தமிழகம்! அந்த இழிநிலை நமக்குத் தேவையா? சிந்திக்க வேண்டும் தமிழர்கள்!

தமிழ் நிலம்

சிறப்பாசிரியர் :

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

பொறுப்பாசிரியர் குழு :

புலவர் இறைக்குருவனார், சென்னை-5., வினைவேந்தன், சென்னை-5.

உறுப்பாசிரியர் குழு :

1. 'தமிழம்' செம்பியன், சென்னை.
2. பாவலர். முல்லைவாணன், சிங்கை.
3. ந. முத்துக்குமரன், அறி.இ பல்லடம்.
4. இரா. ந. வீரப்பன், மலேசியா.
5. சொல்லாய்வறிஞர். ப. அருளி, வணி.இ.ச.இ., புதுவை.
6. சுப. சுப்பிரமணியம், அந்தமான்.
7. மா. பூங்குன்றன், க.மு. சென்னை.
8. ப. மணிசேகரன், மே. செருமானி.
9. அ. பு. திருமாலன், மலேசியா.

புரப்பாசிரியர் குழு :

1. மா. ஆறுமுகம், பல்லடம். 2. ப. துரையரசன், திருப்பூர். 3. சுப. திருமாறன், நெய்வேலி 4. நாரா. மகிழ்நன், திருச்சி. 5 கோ உளங்கரமகன், இராசிபுரம். 6 புலவர். கா. இளமுருகன், க.மு பு, புளியம்பட்டி 7. நா இளமாறன், பவானி. 8 சோ. தமிழ்மகன், நோவை. 9. கு. மேழிவளவன், அ. பள்ளிப்பட்டி. 10. க. ஆகுன்றன், திருவள்ளூர் 11. புலவர் மு. ஆறுமுகம், க மு, சாத்தனூர். 12. பா பொ இளங்கோ, ஈரோடு. 13 இரா. இளம்பிறைச்செல்வன், (பாலகங்காதரன்) சின்னசேலம். 15. த பொறி. இ திருச்சி 14 மருத்துவர் ஆ விசுவநாதன், சின்னசேலம். 15. த கரிகாலன், கடையநல்லூர் 16 பாவலர் சா சி. சுப்பையா, ஈப்போ, மலேசியா 17 ச இறைவாணன், சிங்கப்பூர். 18. பாவலர். முத்துப்பாண்டியன், பேராக் மலேசியா 19 அ. தங்கராசன், ஈப்போ, மலேசியா. 20. க. சச்சிதானந்தன், தென்னேமன், ஏடன்.

கட்டுரையாசிரியர் குழு :

1. பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரையார், க. மு. சென்னை.
2. பேரா. கு.வெ.கி. ஆசான், க.மு. கோவை.
3. மெ. சிதம்பரனார், துணையாசிரியர், 'தமிழ்முரசு' சிங்கப்பூர்.
4. பண்டிதர். க. பொ. இரத்தினம், இலங்கை.
5. சிந்தனைச்செம்மல். கு. ச. ஆனந்தன், வணி. இ. ச. இ., கோபி.
6. ஆட்சிமொழிக்காவலர். கீ. இராமலிங்கனார், க.மு. சென்னை.
7. பேரா. பர். க. ப. அறவாணன், சென்னை.
8. பேரா. இல. க. இரத்தினவேலு. மதுரை.
9. ப. பத்மநாபன், க., மு. ச. இ. சோமனூர்.
10. புலவர். ச. சிவசங்கு, ஏரல்.
11. மருத்துவர். கோ. கோவிந்தனார், சென்னை.
12. புலவர். தி. நா. அறிவுஒளி, க. மு., திருக்கழுக்குன்றம்.
13. பேரா. ம. அரங்கசாமி, கோபிசெட்டிபாளையம்.
14. பர். தாயம்மாள் அறவாணன்., செனகல்.
15. பேரா. சதாசிவம், க. மு., ஈரோடு.
16. புலவர். பொதிகைச்செல்வன் க. மு.
17. அறிஞர். குணா, வெங்காலூர்,
18. கோ. மு. பெருமாள், அறி. இ. சென்னை.
19. சி. அரசிறைவன், அறி. இ., தஞ்சாவூர்.
20. செம்பியன் வல்லத்தரசு, சென்னை.
21. பாவலர். பெ. மணிவேலன் க. மு., அரூர்.
22. அ. தெ. தமிழநம்பி, விழுப்புரம்.
23. க. குழந்தைவேலன், க.மு. சென்னை.
24. பாவலர். கடலூர். மணிமாறன், க. மு. திருச்சி.
25. த. அன்பழகன், மஞ்சள் நீர் காயல்.
26. இரா. பாவாணன், புதுக்கோட்டை
27. தி. குமரப்பன், க. மு. மதுரை.
28. பாவலர். ம. நிறைவாணன், க. மு., வேலூர்.
29. இரணியன், க. மு. கோவை.
30. பர். ஆறிறைவன், சென்னை.
31. 'தமிழ்ச்சுடர்' மணிமுத்து, அறி. இ.. பழனி.
32. உமாமகேசுவரன் (முகுந்தன்) இலங்கை.
33. மருத்துவர் சோ. இராசசுந்தரம், கொக்குவில், இலங்கை.
34. புலவர். நாவை-சிவம் மணப்பாறை

செய்தியாசிரியர் குழு :

1. புலவர்.பொன். முகிலன், கூவலூர். 2. கி இளஞ்சேரல் முதுபாண்டியன், மின்பாறை 3, ச. சின்னத்துரை, நெய்வேலி. 4 தென்னவன்கோ, நெல்லை. 5. ப. முருகவேள், சென்னை. 6. கும்ர. தன்னொளியன், பாகாயம். 7. மு. உலகமுதல்வன், திருவண்ணாமலை. 8. கோ. நக்கீரன், சோளிங்கபுரம். 9. ம.செ. தமிழ்மணி, நெமலி. 10. புலவர். ந. அ. அண்ணாமலை, ஆலங்காயம். 11. புலவர். இரா. தமிழ்வேந்தன், எழில், இறையூர். 12. புலவர். கு. அண்டிரன், சின்னச்சேலம். 13. பொற்செழியன், வெங்காலூர். 14. குழந்தை. ஈகவரசன், திருச்சி. 15. த. தமிழ்த்தென்றல், தஞ்சை. 16. மு.பழ. சதாசிவம், சேலம். 17. அரங்க. தமிழ்மணி, கோவை. 18. க. தமிழப்பன், திருப்பூர். 19. செ. வ. புகழேந்தி, கள்ளக்குறிச்சி. 20. பால். இறையொளியன், தாராபுரம். 21. வி. சே. வேலிறையன், வி. க வலசு 22. நிலா. வேங்கடவன், ஈரோடு. 23. புலவர். இரா. சிவசண்முகம், முகவை. 24. தெ. சாலமகன்அரசு, விருதுநகர். 25. மு.பெ. பறம்பை அறிவன், பரமக்குடி. 26. கல்லை. பெருஞ்சித்திரன், கல்லுப்பட்டி. 27. சங்க. தமிழ்ச்செல்வன், திருக்குறுங்குடி. 28. ந. இரா. தமிழவேள், நரசீபுரம். 29. கோ. ப. சீரங்கசாமி, கோவை. 30. திரு. தாமரைக்கோ, முத்தரையர் பாளையம். 31. இரா. அறிவின்பன், அந்தமான். 32. புலவர் நா. தமிழவேள், பழங்கரை. 33. திரு. விழுப்பரையன், விழுப்புரம். 34. சி தமிழ்க்குமரன், கீரமங்கலம். 35. புலவர். தே. வே. சந்தானம், அரூர். 36 துரைமடங்கன், கோவை. 37 இரா கழராம்பன், திண்டுக்கல் 38 அ. தமிழன்பன், கடையநல்லூர். 39. மு. குமரிச்செல்வன், மணவாளக்குறிச்சி 40. தா. மு தமிழ்ப்பித்தன், குமரி. 41. மு. சிதம்பரநாதன், உதகமண்டலம். 42. சா. தங்கராசு, குவாகம் 43. புலவர் ஆ. முகிலன், சிதம்பரம். 44 மெய் அருண்மொழியன், பெருவயல். 45 புலவர். ஆ. பு. கலிங்கனார், தா. வாடிப்பட்டி. 46. அ. எழிலன்பன், கண்டராதித்தம் 47. புலவர் க தூக்கிய திருவடியார், உளுந்தூர்ப்பேட்டை. 48 அ. பெ வளர்தமிழ் அறிவன், பேட்டை வாய்த்தலை. 49. க மு. குணசேகரன், இரங்கூன். 50. செல்லையா, கலிபோர்னியா. 51 சி. கோபாலக்கிருட்டிணன், சவுதிஅரேபியா. 52. சு. சுப்பிரமணியன், அபுதாபி. 53. முரு. குழ. வீரசிங்கம், இலண்டன், 54. நாரண. திருவிடச்செல்வன், மலேசியா. 55 ஈழவேந்தன், கொழும்பு 56 தியாகேசுவரன், பிரான்சு. 57. புட்பரதம், மொரிசியசு. 58. எம்.ஏ. சுவாமி, மணிலா. 59. ந. சிவலிங்கம், கனடா.60. சி. தியாகராசா, நார்த்விச் (U.S.A) 61. மு. சிரீராமலு, இந்தோனேசியா, 62 உமாகாந்தன், பாரிசு. 63. க. சின்னப்பன், டர்பன். 64. பாவலர். காசிநாதன், கோலாலம்பூர்.

விளம்பர ஆசிரியர் குழு :

1. சி. இமையவரம்பன், திருச்சி.
2. சோ. ஆற்றலரசு, சென்னை-5.
3. துரை-தென்னவன், சென்னை-19.
4. செ. கண்ணன், சென்னை-5.
5. சு. இளங்கோவன், திருச்சி.
6. அழ. இளமுருகன், சென்னை-5.
7. மா. பொழிலன், சென்னை-5.

ஓவிய ஆசிரியர் குழு :

1. பு. அறவாழி, உடுமலைப்பேட்டை, 2. வி. சின்னையன், சென்னை

தொடர் : 1

தமிழீழ விடுதலை வரலாறு

ஈழம் ஒரு நாடன்று. இரு நாடுகளைக் கொண்ட ஒரு தீவு. ஈழம் என்ற பெயர் தீவு முழுமைக்குமானதேயன்றித் தீவின் ஒரு பகுதியைக் குறிப்பதாகாது. இலங்கை என இக்காலத்தில் அழைக்கப் பெறும் இத்தீவே பழந்தமிழ் இலக்கியங்களில் ஈழம் என அழைக்கப் பெற்றது.

ஈழத்தில் தமிழர்கள் வரலாற்றிற்கு முற்பட்ட கால முதல் வாழ்ந்து வருகின்றனர் என்பது, ஆய்வாளர்களின் உறுதியான முடிவாகும். குமரிக்கண்டம் என்பது ஈழத்தையும் உள்ளடக்கிய பகுதியே. குமரிக்கண்டம் கொடுங்கடல் கொள்ளப்பட்டதும் ஈழம் தாய்த் தமிழ் நிலப்பரப்பிலிருந்து பிரிந்து ஒரு தனிப்பெரும் தீவாயிற்று. கடல் அரிப்பைத் தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படாத நிலையில் கடல் பெருத்து நிலம் சுருங்கியது மட்டுமல்லாது தமிழ் நாட்டைவிட்டு ஈழம் பதினெட்டுக் கல் தொலைவு எட்டிப் போயும் விட்டது. நிலம் எட்டிப்போய் விட்டதனால் ஈழத்தமிழர்களுடனான தொடர்புகளும் தமிழ் நாட்டில் இருந்து எட்டிப் போய்விட்டது. ஆயினும் அத் தொடர்புகள் அறுபட்டு விடவில்லை.

சீரழிந்த தமிழினம்

தமிழ் நிலம் இயற்கைக் கோளினால் துண்டு போடப்பட்டுச் சீரழிந்தது. தமிழர்கள் உட்பகையாலும், பதவி ஆசைகளாலும், சமய மூட நம்பிக்கைகளினாலும், மொழி - இனப் பற்றின்மையாலும் தங்கள் ஆளுமையை இழந்தனர். இறைமையையும், தனித்தன்மையையும் இழந்தனர். இதனால் கலை, நாகரிகம், பண்பாடு, மொழி, இவை தமது தனித்தன்மையை இழந்து கலப்படைந்து காணப்படுகின்றன.

பிரிந்துபட்டுப் பரந்து பல தமிழ் நிலங்களில் வாழுகின்ற உலகத் தமிழர்களின் நிலையை முன்னேற்றவென்றே ''தமிழ் நிலம்'' என்ற ஏடு தனித்தமிழைத் தனது உயிர்க் கொள்கையாகக் கொண்டுள்ள ''பாவலரேறு பெருஞ்சித்திரனார்'' அவர்களினால் வெளியிடப் பெறுகின்றது.

தமிழ் நிலப்பரப்பில் இருந்து துண்டுபட்ட ஈழம் வாழ் தமிழ் மக்களின் துன்பமும் துயரமும் ஈகமும் வீரமும் நிறைந்த தமிழீழ விடுதலை வரலாற்றினை இவ்வேட்டில் தொடர்ந்து எழுதும்படி பாவலரேறு அவர்களினால் பணிக்கப் பெற்றேன். இவ் வீர வரலாற்றினை எழுதக்கூடிய ஆற்றலும், தகுதியும் தனிப்பட்ட எனக்கு இல்லையானாலும், பாவலரேறு அவர்களின் தகுதியும், நான் சார்ந்துள்ள தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஆற்றலும் எனக்குத் துணை நின்றுதவும் என்ற முடிவில் இதில் துணிந்து இறங்கியுள்ளேன்.

தமிழீழத்தவரின் வீர வரலாறு நீண்ட ஆழமான வாழ்வு பெற்றிருந்தது. மேற்கத்திய படையெடுப்புக் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தின் விடுதலை வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்வதே இன்றைய நிலையில் எமக்குப் பயன் உடையதாகும்.

ஈழத் தமிழர்களின் விடுதலை வரலாறு பல காலக் கட்டங்களாகப் பிரிக்கப் பெறுதல் வேண்டும்.

(1) வரலாற்றுக் காலம், (மேற்கத்திய அயலவர் ஆளுமைக்கு முற்பட்ட காலம்)

(2) மேற்கத்தியரின் ஆளுமைக்குட்பட்ட காலம்.

(அ) போர்த்துக்கேயர் கைப்பற்றிய காலம் (PORTUGESE)

(ஆ) ஒல்லாந்தர் காலம் (DUTCH)

(இ) பிரித்தானியர் ஆளுமைக் காலம் (BRITISH)

(3) ஈழம் வேற்று ஆட்சியாளரிடமிருந்து விடுதலை பெற்றபின் இன்று வரை நடைபெறும் போராட்டக் காலம்.

மேற்கத்தியரின் ஆளுமைக்குட்பட்ட காலம் (போர்த்துக்கேயர் ஆட்சி)

கி. பி. 1618ஆம் ஆண்டு கன்னி—துலை (ஆவணி-புரட்டாசி) மாதங்களில், தமிழீழத்தின் தன்னிகரற்ற மன்னனாக, ஆட்சி செய்த சங்கிலி மன்னனின் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்குடன் போர்த்துக்கேயர் அப்பர் (பாதிரியார்) பீதுறு பொட்டன் கொன் தலைமையில் மன்னாரில் வந்திறங்கிய போர்த்துக்கேயப்படைகளின் மறைமுக உதவியுடன் உள்நாட்டுக் கலகம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டு உதவி

தமிழ்நிலத்தைக் கைப்பற்றித் தமிழர்களின் உழைப்பைச் சுரண்டுவதற்கு வேற்று மேலாண்மையாளர்கள், உட்பகைவர்களின் துணையுடன் தம் சூழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற இருக்கின்றனர் என்பதைச் சங்கிலி மன்னன் உணர்ந்தான். உள்நாட்டுக் கலவரத்தை அடக்குவதுடன் வெளிநாட்டு வல்லாண்மை வெறியர்களினுடைய படையையும் சங்கிலியினால் வெற்றி கொள்ள வேண்டியிருந்தது. ஈழத் தமிழனுக்கு நெருக்கடிகள் வரும் நேரத்தில் எல்லாம் குரல் கொடுத்து வரும் தமிழ்நாட்டரசு, அன்று தமிழீழத்தின் துயர் துடைக்க வெறும் குரல் மட்டும் போதாதெனத் தீர்மானித்தது. தஞ்சை இரகுநாத மன்னன் தன் படைத் தலைவன் வருணகுலத்தானின் தலைமையில் ஐயாயிரம் வீரர்களை அனுப்பிக் கலகத்தை அடக்கச் சங்கிலி மன்னனுக்கு உதவினான்.

யாழ்ப்பாணத்தைத் தலைநகராகக்கொண்ட தமிழீழ அரசைக் கைப்பற்றிச் சங்கிலியினைத் தளை (கைது) செய்யும்படி கோவாவில் (இந்தியாவில்) இருந்த தனது படைத் தளபதிக்குப் போர்த்துக் கேய மன்னன் ஆணை பிறப்பித்திருந்தான். தனித்து நின்று தமிழீழ மன்னனை வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்த போர்த்துக் கேயத் தளபதி சிங்கள மன்னர்களின் உதவியுடன், தமிழீழ உட்பகைவர்களின் துணையையும் நாடினான். தமிழீழ மன்னனுக்கெதிராகப் போர் தொடுத்தான். வெற்றி - தோல்விகள் மாறிமாறி - இரு பக்கமும் ஈட்டின. எனினும் திறைப் பணம் கொடுக்குமளவுக்குத் தமிழீழ அரசு போர்த்துக்கேய அரசிடம் அடைக்கலம் புகவோ அடிமைப் படவோ இல்லை.

வெற்றி மேல் வெற்றி

இந் நிலையில் போர்த்துக்கேயர் சிங்கள அரசர்களுடன் போர் தொடுத்தனர். இவ்வேளை சிங்கள அரசருக்கு உதவியாக தமிழ் நாட்டுப் போர் வீரர்களைச் சங்கிலி மன்னன் பெற்று உதவினான். தமிழீழ மன்னன் சங்கிலியனை முதலில் வீழ்த்தினாலேயே இலங்கையில் மற்றைய ஆட்சிகளைப் பிடிக்க முடியும் என்பதை உணர்ந்த போர்த்துக்கேயர் மீண்டும் தமிழீழ அரசை வீழ்த்தும் முயற்சியில் ஈடுபட்டனர். இதை உணர்ந்த சங்கிலியன் வரணகுலத்தானின் துணையுடன் ஒல்லாந்தாரின் (DUTCH) உதவியையும், மலையாளத்திலுள்ள குஞ்சலி வீரர்களின் உதவியையும் பெற்றான். போர்த்துக்கேயர் - சிங்கள அரசர்களின் படை வலிமையையும் பயன்படுத்திச் சங்கிலியனைத் தாக்கினார்கள். தமிழீழ மன்னன் சங்கிலியன் படை கொடுத்துதவிய சிங்கள மன்னரே சங்கிலியனுக்கெதிராகப் போர் புரியத் தம் படையைப் போர்த்துக்கேயருக்குக் கொடுத்து உதவினார்கள். தமிழீழ மன்னனுக்கும் போர்த்துகேயருக்கும் ஏற்பட்ட இக்கடும் போரில் சங்கிலிமன்னன் தொடர்ந்து பல வெற்றிகளைப் பெற்றான்.

போர்த்துக்கேயருக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியினால் வீரர்கள் களைப்படைந்தனர். அதேவேளை போர்த்துக்கேயப் படைக்கு உணவு உடைப் பஞ்சம் ஏற்பட்டது. இதை உணர்ந்த போர்த்துக்கேயதளபதி பிலிப்பு டி ஒலிவேரா; காக்கை வன்னியன் போன்ற தமிழ் இன இரண்டகர்கள் உதவிகளையும் - சில அப்பர் (பாதிரி)களின் உதவிகளையும் பெற்று - பசி பட்டினியைத் தீர்க்க முயன்றான். அவ்வேளை சங்கிலி மன்னன்-தமிழின இரண்டகர்களையும், எதிரிக்குத் துணை நிற்பவர்களையும் - அச்சுறுத்தினான்.

தமிழரின் வீரப் பண்பாடு

அச்சத்தினால், பலர் அரசனின் பக்கம் சேர்ந்தனர். இதை உணர்ந்த போர்த்துக்கேயத் தளபதிக்குத் தொடர்ந்து போராட முடியாத நிலையேற்பட்டது. ஆகவே சங்கிலி மன்னனுக்குத்தூது அனுப்பினான். தமிழ் மறவர் குடிப் பிறந்த தமிழ் மன்னர்கள் எதிரியைப் பட்டினி போட்டு வெல்வதையோ, தூக்கத்தில் தாக்குவதையோ, பின் நின்று தாக்குவதையோ விரும்பாதவர்கள். அதற்கேற்பச் சங்கிலி மன்னனும் ஒலிவேராவின் படைகளுக்குரிய உணவு, உடை வாங்க வரையறையின் (நிபந்தனையின்) பேரில் பணம் கொடுத்துதவினான். உணவு, உடைகளைப் பெற்றதும் படைகள் யாழ்ப்பாணத்தை - குடாக்கடலைத் தாண்டிப் பின்வாங்க வேண்டுமென்பதே வரையறை. ஆனால் பொருள்களைப் பெற்றதும் போர்த்துக்கேயத் தளபதி திரும்பிப் போக மறுத்தான். சங்கிலி மன்னனுக்குக் கொடுத்த உறுதிமொழியை நடைமுறைப்படுத்தாது ஏமாற்றினான்.

(தொடரும்)

— முகுந்தன் —

ஆரியப் பார்ப்பனர் திருந்தினர்

என்றே, ஆர் உனக்குரைத்தனர் ?

அவர் குணம் ஒன்றே !

கே: சென்னையில் 95 அடி உயரத்துக்குப் பெரியார் நினைவுத் தூண் அமைக்கப் போகிறார்களாமே ? அந்த உயரத்துக்கு என்ன சாதித்து விட்டார் பெரியார் ?

ப : எனக்குப் புரியவில்லை. ஆனால், அதன் மீது காக்காய்கள் உட்கார்ந்தவுடன், தமிழகத்தைப் பற்றிய பெருமையை நாம் உணர முடியும். தமிழகத்தில் காக்காய்கள் என்ன உயரத்தை எட்டிப் பிடிக்க முடியும் என்பதை மக்களுக்கு நினைவுறுத்தும் சின்னமாக அது அமையட்டுமே !

— துக்ளக் 15-10-82.

எங்கள் விடை என்ன ?

ஆயிரம் இராசாசியால் 'செய்ய முடியாததை ஒரு பெரியார் செய்திருக்கிறார் என்பதைச் 'சோ'வின் மனம் சொல்லும்! வாய் சொல்லுமா ? அதுதான் அவர்களுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடு ?

★ ★ ★

சென்னை 'காதி கிராமோத்யோக் பவன்' அண்ணாசாலை விற்பனை நிலையத்தில்,

'காந்தி, அண்ணா, பெரியார்'

இவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு பெரிய அளவு தள்ளுபடி விற்பனை'' என்று பொருள்பட ஒரு பெரிய விளம்பர அட்டை மாட்டப்பட்டிருந்தது. காந்தியைத் தவிர மற்ற இருவருக்கும் கதர்த் துணிக்கும் என்ன 'சம்பந்த'மோ?

அண்ணா அவர்களைத் 'தென்னிந்திய காந்தி' என்று அவர் 'அபிமானி'கள் கூறுவது வழக்கம். அது காரணமா ? ஈ. வெ. ரா. அவர்கள் ஒரு காலத்தில் கதர் ஆடை 'தரித்த'வர்; காந்தியவாதியாயுமிருந்தவர். அது காரணமோ !

தும்லன் — தினமணிச்சுடர். 17-10-82

எங்கள் விடை என்ன ?

தமிழ் நாட்டில் காந்தியாரையும் அவரின் கைந் நூல் ஆடையையும் கூடத் தமிழர்களின் தலையில் கட்டித் தொழில் நடத்தத் தமிழினத் தலைவர்கள் தாம் துணை நின்றவர்கள் என்பது தும்லனுக்குத் தெரியாமல் இருக்குமா என்ன ?

ஆணும், பெண்ணும், உளவியல்...

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிரியல் முறைப்படி, ஒரு குழந்தை ஆணாகவோ, பெண்ணாகவோதான் பிறக்கிறது. ஆனால் பிறருடன் பழகும் முறையில் பண்பாட்டுத் தாக்கங்களுக்கேற்ப அவனோ, அவளோ, குமுகாய முறையில் ஒன்றாக உள்ளனர். ஆணுக்கோ அன்றிப் பெண்ணுக்கோ உள்ள குமுகாயப் பொறுப்பைக் குறிப்பிட்ட குமுகாய முறைமைதான் வரையறுக்கிறது.

ஏதமான பாதை

பல நூற்றாண்டுக் காலமாகவே ஒரு பையனுக்கும், பெண்ணுக்கும் ஆன உளவியல் போக்கும், நடத்தைப் படிவமும் வேறுபட்டுத்தான் இருக்கும் என்று மக்கட் குலம் உறுதியாகக் கருதி வந்துள்ளது. ஆனால், அண்மை ஆண்டுகளில் இந்தக் கருத்து திருத்தப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். அதன் விளைவாக, தனிப்பட்டவர்களுக்கும், மொத்தத்தில் குமுகாயத்திற்குமே தீங்குதாம் ஏற்படுமே அன்றி நன்மை விளையாது.

பெற்றோர்கள், சிலர் தம் பெண் குழந்தைகளை, ஆண் பிள்ளைகளைப் போன்றும், வேறு சிலர் தம் ஆண் குழந்தைகளைப் பெண்களைப் போன்றும் வளர்க்க முயல்கின்றனர். சிறு பருவத்தில் பொம்மைகளுடன் விளையாடி வளராத எந்தப் பெண்ணும், பிற்காலத்தில் தாயாகும்போது, தாய்மை உணர்ச்சியும், பழக்கங்களும் குறைந்தவளாகவே இருக்கிறாள் என்பதை ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. அதே போல, ஆண் குழந்தைகளைப் பெண்களைப் போல் வளர்த்தால், அதன் பயனாக அவை தசைவலிவின்மையும் கோழைத்தனமும், போதுமான அளவு தன்னுரிமை நடத்தைப் படிவம் அற்ற நிலையும், கொண்டனவாக உருவாகின்றன. ஆண்களுடன் கலந்து பழகும் தன்மையை அவர்கள் இழந்து விடுகின்றனர்.

எனினும், வளர்ப்புமுறை குறித்துப் பெற்றோர்கள் சிலர் சரிவர அறிந்து கொள்ளாததனாலோ அல்லது தவறாகப் புரிந்து கொள்வதனாலோ மட்டுமே ஏற்படுவதன்று இது. சோவியத்து வாழ்க்கையில், ஆண், பெண் இரு பாலாருமே முழுமையான சமநிலை பெறுவதாலும் இரு பாலாருமே வேலைக்குச் சென்று வருவதாலும், நடத்தைப் படிவங்கள் இடையேயுள்ள வேறுபாடுகள் பெரிதும் குறைந்து விடுகின்றன. கண்டிப்பான, வலிமை பொருந்திய, தீர்மானிக்கும் ஆற்றல் வாய்ந்த தந்தை என்றும், அன்பான, மெய்யான தாய் என்றும் ஆன தெளிவான வேறுபட்ட தோற்றங்கள் குழந்தைகளின் மனத்தில் உருவாவதில்லை. இந்தச் சிக்கல் மிகவும் குழப்பம் ஆனது. எல்லாக் குழந்தைகளுமே ஆண், பெண், பாலின நடத்தைப் படிவ வேறுபாடுகளை உண்ரும் தன்மை படைத்தவர்களாக இல்லை.

தமது பாலினம் பற்றிய ஓர் உணர்வு, ஒவ்வொருவருக்கும் தேவையானதே ஆகும்; அஃதன்றி ஓர் ஆணோ, பெண்ணோ குமுகாயத்தில் இயல்பான வாழ்வு வாழ முடியாது.

உறவுகளின் தன்மை

இதனை நாம் எளிதில் கூறி விட முடிகிறதென்றாலும், நடைமுறையில் அதனைக் கொணர்வது அவ்வளவு எளிதானதன்று. எனினும் ஒன்றுமட்டும் உறுதி; ஆண்-பெண் சமம் என்ற பெயரால், இரு பாலாருக்கும் இடையேயான உளவியல் வேறுபாடுகளை நாம் அழிக்க முற்படக்கூடாது. அத்தகைய இயற்கை வேறுபாடுகளின் முரண்பாட்டில்தான், ஆண்—பெண் உறவுகளின் இனிமை உள்ளதே அன்றி, வேறுபாடுகளை அழிப்பதில் அன்று.

ஆணும், பெண்ணும் குமுகாயப் பொறுப்புகளை இருபாலாரின் நலன்களுக்கும் உகந்த வகையில் ஏற்று, பாலின வேறுபாடுகளின் நெறிகளையும் சரியானபடி விளங்கிக் கொள்ளுமாறு செய்யத்தக்கச் சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

தமிழ் நாளிகை

(தமிழ் நாள்காட்டி)

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு!

அழகிய எண்களுடன் தமிழ் மாதப் பக்கல்களும், தமிழ் நடைமுறை எண்களுடன் ஆங்கில மாதப் பக்கல்களும், ஒவ்வொரு மாதத் தாளிலும் தமிழ், தமிழின, தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்குரிய கொள்கை மொழிகளும் குறிக்கப் பெற்று வரும் திசம்பர் முதற்கிழமையிலேயே விற்பனைக்குக் கிடைக்கும்படி அழகிய படத்துடன் கூடிய இருவண்ண நாளிகை வெளிவருகிறது.

விலை விளக்கம் பின்னர்,

தேவையானவர்கள் முன்கூட்டியே எழுதுக!

விற்பனையாளர்களுக்குத்
தக்க கழிவு கொடுக்கப்பெறும்.

உ.த.மு.க. மே|பா தென்மொழி, சென்னை—5.

★ இந்தியா ஒரே நாடாக என்றும் இருந்ததில்லை.
இதற்கு ஒரு பொது மொழியும் இல்லை.

★ ஒரு வட்டார மொழியான இந்தியைப்
பொதுமொழியாக்குவது எப்படிச் சரியாகும்!

★ இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்பவர்
வட மாநிலங்களுக்குப் போவதுதானே!

வரலாற்றை மூடி மறைப்பதா ?

['இந்து' நாளிதழில் ஆசிரியர்க்கு மடல் பகுதியில் 'வட நாட்டில் கிடைக்கும் வேலை வாய்ப்பிற்காகத் தமிழ் நாட்டில் இந்தி பயில வாய்ப்பு வேண்டும்' என எழுதப் பெற்ற மடலுக்கு விடையாக அதே இதழில் 14 - 9 - 82-இல் வெளியான மடலின் மொழி பெயர்ப்பு 'தமிழ் நிலம்'' அன்பர்களின் சிந்தனைக்கு வைக்கப்பெறுகின்றது.

ஐயா,

திரு. கே. இரமணி அவர்கள் தம் மடலில் (இந்து, செப் 8,) ஆங்கிலேயர், இங்கு வருவதற்குமுன் இந்தியாவை (இற்றைப் பாகிஸ்தானம், வங்காள தேசம் உட்பட) பல மன்னர்கள் பல்வேறுபட்ட பகுதிகளாக ஆண்டு வந்திருந்தாலும் இந்தியா ஒருமைபட்ட சிறந்த நாடாக திகழ்ந்து வந்தது எனக் குறிப்பிட்டிருந்தார். அஃதுண்மையாயின் ஆங்கிலேயர் எப்படி எளிதில் இந்தியாவில் தம் ஆட்சியை நிறுவியிருக்க முடியும்? இந்திய வரலாற்றைப் பார்ப்பவர்க்கு, இந்தியா எப்பொழுதும் ஒருங்கிணைந்திருந்ததுமில்லை ஒரு பொது மொழியுடன் ஒரே நாட்டாக இருந்ததுமில்லையென்பது தெற்றென விளங்கும். இந்திய மன்னர்கள் ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு தம்முள் அடிக்கடி போரிட்டு வந்தனர். ஆங்கிலேயர் தம் ஆட்சியை நிறுவி ஆங்கிலத்தை அலுவல் மொழியாக ஆக்க இயன்றமைக்கு இதுவே காரணம்.

ஆங்கில மொழிக்கு அடிமையாக்கப்பட்ட பின்னர்தான் நமக்கு இந்தியர் என்ற உணர்வு தோன்றியது. இன்று ஆங்கிலத்தை அலுவல் மொழியாக ஏற்க மறுப்பவர்கள் அதனை வெறுப்பவர்கள் ஆங்கில முறைப் பாராளுமன்றம், நயன்மை முறை, கல்வி முறை முதலிய எண்ணிறந்த துறைகளிலும் அவர்களைப் பின்பற்றுவானேன்? அவர்களின் உடுப்பு முறைகளை மட்டும் மேற்கொள்ளலாமோ? நமக்கு ஆங்கிலம் வேண்டாதாயின், அரசால் ஏற்பளிக்கப் பெற்றுள்ள நாட்டின் அத்தனை மொழிகளுக்கும் உரிய முகாமை அளிக்கும் ஒரு புது அலுவல் மொழியை உருவாக்கிக் கொள்ள வேண்டுமேயன்றி இந்தி பேசாத மக்கட் பகுதி மீது வேறு ஒரு வட்டார மொழியான இந்தியைத் திணிக்கக் கூடாது.

தமிழர்கள் வேலை வாய்ப்பிற்காக வடக்கே போக வேண்டியிருத்தலால், தமிழ் நாட்டில் வாழ்ந்தாலும், இந்தி படித்துக் கொள்ள வேண்டும் என உணரும் திருமான் இரமணி போன்றவர்கள் ஏன் வடநாட்டிற்கே போய்த் தங்கள் குழந்தைகளை இந்தி மூலம் படிக்க வைத்து வேலைக்கு அணியப்படுத்திக் கொள்ளலாகாது?

இம்மாநிலத்தில் இத்தகையோர்க்குக் கொடுக்கப் பெறும் கல்வி, பிற சலுகைகள், தமிழை விரும்பி, தமிழ் நாட்டைத் தொழிலிலும் கல்வியிலும் முதலிடம் பெற வைக்க முயல்வோர்க்கு அளிக்கப்படின் தமிழ் நாட்டிற்கு நற்பயன் விளையுமே. இத்தகையோரின் அடிமைப் போக்கினால் வட இந்தியர்களின் உயர்வு மனப்பான்மை ஊட்டி வளர்க்கப் படுவதுடன் புது வலிவும் பெறுகின்றது.

—கீதா உதயகுமார்
சென்னை.

அண்ணனும் - தம்பியும் !

"அண்ணா!"

"என்ன தம்பி!"

"முத்தொள்ளாயிரம் என்பது ஒரு தமிழ் நூலின் பெயர் தானே?"

"ஆமாம்!"

"அதற்கு ஏன் அண்ணா அந்தப் பெயர்?"

"சேரன், சோழன், பாண்டியன்—இவர்கள் மீது பாடப்பட்ட தொள்ளாயிரம் தொள்ளாயிரமான மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்டது அந்த நூல் என்பதால் அதற்கு முத்தொள்ளாயிரம் என்று பெயர்."

"அப்படியானால் 2700 பாடல்கள் கொண்டது அந்நூல் என்று சொல்லுங்கள்!"

'ஆமாம்,'

'இன்று அந்த நூலில் கிடைத்திருக்கும் பாடல்கள் எத்தனை அண்ணா?'

'108-தான்!'

'அவ்வளவு தாமா?'

'ஆமாம், அவையும் புறத்திரட்டு என்னும் நூலில் இடம் பெற்றவையே'

'மீதமுள்ள 2592 பாடல்களையும் அழித்து விட்ட தமிழ்ப் பகைவர்கள் யார் அண்ணா'?

'எனக்குத் தெரியாது தம்பி!'

- தமிழவேள்

வினா - விடைப் பகுதி

'தமிழ் நிலம்'—அடுத்த இதழிலிருந்து வினா-விடைப் பகுதி தொடங்கவிருக்கின்றது.

அன்பர்கள் உ.த.மு.க. கொள்கை தொடர்பாகவும், பிறவற்றைப்பற்றியும் தம் வினாக்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

—அமைச்சர்

செங்கொடி நடுவில் வெள்ளொளி வட்டம்

செங்கொடி நடுவில் வெள்ளொளி வட்டம்
சிறப்புடன் பறந்திடல் வேண்டும்!
இங்குள இருளே இரிந்தகன் றோட
எவருமே முனைந்திடல் வேண்டும்!
பொங்குணர் வோடு பூரித்த தோளால்
புலியெனச் சீறிடல் வேண்டும்!
கங்குலும் பகலும் கனித்தமிழ் நாட்டார்
உமைக்கு முன்வரல் வேண்டும்!

தனித்தமிழ் நாட்டைத் தலைமைகொண் டெவரும்
தன்னுரி மைபெறல் வேண்டும்!
இனித்தமிழ் மண்ணில் எம்மொழி யாரும்
எற்றமின் றகற்றிடல் வேண்டும்!
முனித்தெழுந் தெங்கும் முந்தையர் புகழை
மொய்ம்புறக் காத்திடல் வேண்டும்!
பனித்துளி யென்றே பதுக்கிடு வாரைப்
பாட்டாளி விரட்டிடல் வேண்டும்!

அழுகுரல் இழிமொழி அயலவர் ஆட்சி
அனைத்தையும் அகற்றிடல் வேண்டும்!
எழுபகை யாவையும் எந்தமிழ் வாளால்
ஏற்றிரை யாக்கிடல் வேண்டும்!
கழுகெனக் கூர்மையில் கனித்தமிழ் மக்கள்
கடமையில் இணைந்திடல் வேண்டும்!
புழுவென எவரும் புரள்வது இலையெனும்
புத்துல கமைத்திடு வோமே!

- முனைவன்

நம்நாட்டுக் கல்வி அமைப்பின் அவலநிலை!

நடுவண் கல்வித்துறை அறிக்கை

தொடக்கப் பள்ளிகளில் ஆண்டு இறுதித் தேர்வு ஒழிக்கப்பட வேண்டுமென்று நடுவண் கல்வித்துறை கருதுகிறது. பள்ளிப் படிப்பைப் பாதியில் கைவிடுவோர் இப்போது மிகவும் அதிகரித்திருப்பதற்கு அந்தக் கட்டத்தில் ஒரு மாணவன் வடிகட்டப்படுவது ஒரு முகாமையான காரணமாக உள்ளது.

மேலும் ஆண்டு முழுவதும் மாணவர் திறனை மதிப்பிடும் முறையில் குறைகளைத் தீர்க்கும் பயிற்சியை அளிக்கும் வாய்ப்பு பள்ளிக்குக் கிடைக்கும்.

ஐந்தாம் வகுப்பை எட்டுவதற்குள் 64 விழுக்காடு மாணவர்கள் பள்ளிப் படிப்பைக் கைவிடுகின்றனர். நாட்டில் எட்டாம் வகுப்பை எட்டுவதற்குள் 77 விழுக்காட்டுப் பேர் படிப்பை நிறுத்தி விடுகின்றனர், கல்வித் துறைக்குக் கிடைத்த அண்மை விளக்கத்தின்படி இது தெரிய வருகிறது.

6 முதல் 14 அகவை வரையிலுள்ள ஏறத்தாழ 5 கோடி குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்லாத நிலையில் உள்ளனர். இவர்களில் 71 விழுக்காட்டினர் பெண்கள். இவர்களில் படிப்பைப் பாதியில் கைவிட்டவர்களும் பள்ளியில் சேராதவர்களும் உள்ளனர்.

பொதுவாகப் பாதியில் படிப்பை நிறுத்துவோரில் பெண்களே அதிகமாக உள்ளனர். இவர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர்.

பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்துவோரின் தொகை கேரளத்தில் தான் மிகக் குறைவாக உள்ளது. மிக அதிகமாக உள்ள 9 மாநிலங்களில் ஆந்திரமும் அடங்கும்.

மிக அதிகமான குழந்தைகள் பாதியில் படிப்பைக் கைவிடுவதற்குப் பள்ளிக் கல்வி கவர்ச்சியாக இல்லாததே காரணமாகும். மாணவர்களின் அன்றாட வாழ்வுக்குப் பொருத்தமற்ற வகையில் இக்கல்வி முறை அமைந்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, தொடக்கப் பள்ளிப் பாடத் திட்டங்கள், அந்தந்தப் பகுதிக்கு ஏற்ற முறையில் பரவலாக அமைக்கப்பட வேண்டும் என்பதைத் தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக்குழு கூறியுள்ளது. தொடக்கக் கல்வியை ஆர்வமுள்ளதாக்கும் வகையில் மாதிரிப் பாடத் திட்டங்களை இக்குழு உருவாக்கியுள்ளது.

மேலும் இப்பொழுதுள்ள நிலையில், ஏராளமான தொடக்கப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்களும், இடஏந்துகளும் இருப்பதில்லை. இதுவும் மாணவர்கள் பாதியில் படிப்பை நிறுத்துவதற்குக் காரணமாகிறது.

நாட்டில் உள்ள 5 இலக்கம் தொடக்கப் பள்ளிகளில் 37 விழுக்காடு பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாகும். கடந்த ஆண்டு (1981) மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் இவற்றை 2 ஆசிரியர்கள் கொண்ட பள்ளிகளாக மாற்ற முடிவாகியது. எனினும் நடைமுறையில் இது முன்னேறவில்லை. நாட்டில் 48 விழுக்காடு பள்ளிகளுக்கு நல்ல கட்டடங்கள் இல்லை. பல பள்ளிகள் இப்போது வேப்ப மரத்தடியில் தாம் வகுப்புகளை நடத்துகின்றன. எல்லாத் தொடக்கப் பள்ளிகளும் கட்டட வாய்ப்புப் பெற வேண்டுமானால், மேலும் ஏறத்தாழ 10 இலக்லத்து 60 ஆயிரம் அறைகள் கட்ட வேண்டியிருக்கும். இதற்கு உருபா 3000 கோடி வரையில் பணம் தேவைப்படும். இதற்கு ஏதாவது தனி ஏற்பாடு செய்தாலன்றி இப்போதைய திட்ட ஒதுக்கீட்டில் இது இயல்வதன்று என்று கல்வித்துறை வட்டாரங்கள் கூறின.

பள்ளிப் படிப்பைப் பாதியில் கைவிடுவதைத் தடுக்கச் சில நடவடிக்கைகள் ஏற்கனவே நடைமுறையாகியுள்ளன. இலவயமாகப் பொத்தகங்கள் போன்றவையும் சீருடையும் பகலுணவும் வழங்கப் பெறுகின்றன. ஏழை மாணவர்களுக்கு வருகை உதவித் தொகையும் தரப்பெறுகிறது.

—தினமணி: 4-10-82

யார் பிரிவினைக்காரர்கள்?

மக்களைக் குலங் குலமாக - சாதி சாதியாகப் பிரித்த நீங்களா? அல்லது, அவர்களை ஒன்றுபடுத்த முயற்சி செய்யும் நாங்களா?

திருச்சி மாவட்ட உ. த. மு. க. தொடக்க விழாவில் பார்ப்பனர்களைப் பார்த்துப்

பாவலரேறு கேள்வி!

திருச்சி: செப். 26.

கடந்த செப்டம்பர் 26-ம் பக்கல், திருச்சிராப்பள்ளி உலகத்தமிழின முன்னேற்றக்கழகத்தின் தொடக்க விழா திருச்சி நகர அரங்கத்தில் (Town Hall) சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அதில் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், பார்ப்பனர்களும் சில தேசியத் திருடர்களும் எங்களைப் பிரிவினைக்காரர்கள் (பிரிவினைவாதிகள்) என்கின்றனர். நாங்களா பிரிவினைக்காரர்கள்? நீங்கள்தாம் பிரிவினைக்காரர்கள். மக்களைக் குலங்குலமாக, சாதி சாதியாகப் பிரித்து ஒன்றுபட விடாமல் சிதைத்தவர்கள் யார்? நீங்களா? நாங்களா? என்று வீறு முழங்கக் கேட்டார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழினத்தை ஏமாற்றி முன்னேற விடாமல் தடுக்கின்ற முயற்சியைப் பார்ப்பனர்கள் தொடர்ந்து செய்து கொண்டு தான் உள்ளார்கள். அறிவியல் உலகில் வாழும் இக்காலத்திலும் இவ்விநபதாம் நூற்றுண்டின் இறுதியிலும் பெரிய பெரிய பொத்தகங்களாக அச்சிடப் பெற்று அதற்குத் ‘தெய்வத்தின் குரல்’ என்று தலைப்பும் இடப்பெற்று இந்த நாட்டில் வெளிவருகின்றது என்றால் இதைவிட, கொடிய ஏமாற்று இவ்வுலகில் இருக்க முடியுமா?

பட்டுக்கோட்டையில் பிறந்து தஞ்சையில் இரப்பு (பிச்சை) எடுத்துக்கொண்டு அலைந்து காஞ்சியில் ஒதுங்கிய ஒரு ஊசைப் பார்ப்பான் ‘லோக குரு’ ஆகிவிட்டான். அவனின் வேத மதப் புராணப் புளுகுத் தொகுப்புக்களுக்குத்தான் தெய்வத்தின் குரல் என்று பட்டம் சூட்டுகின்றார்கள். சங்கராச்சாரியின் குரல் தெய்வத்தின் குரல் என்றால் எங்கள் குரல் என்ன பேயின் குரலா? நீ தெய்வம் என்றால் எல்லோருக்கும் சோறுபோடு பார்க்கலாம்.

உச்சக் கட்டம்

பெரியார் ஊட்டிய தன்மான உணர்வால் தமிழினம் தலைதூக்கத் தொடங்கிய அதே வேளையில் தலை தூக்கும் தமிழினத்தின் மேல் பார்ப்பனர்களும் பார்ப்பனப் பாதந்தாங்கிகளும் சம்மட்டியடிகளைக் கொடுத்துக் கொண்டுதான் உள்ளனர். அதன் உச்சக் கட்டம் தான் இன்று தமிழ் நாட்டில் ஆர். எசு. எசு. இயக்கம் தலை காட்டுவதும் அதற்குச் சங்கராச்சாரியும் ஏனைய பார்ப்பனர்களும் அணிவகுத்து ஆதரவு காட்டுவதும் ஆன இன்றைய இழிநிலை!

தமிழினத்திற்குப் பாடுபடுபவனைப் பாடுபடநிற்பவனைப் பார்ப்பான் எதைச் செய்தாகிலும் தனக்கும் தன் இனத்திற்கும் உரிய அடிமையாக ஆக்கி வைத்துக் கொள்வான். பார்ப்பான் அவர்களிடம் நேரே சென்று ஆசை மொழி பேசுவான். முடியாத பொழுது தன் மனைவியை அனுப்பிப் பேச வைப்பான்; அதிலும் முடியாத போது தன் மகளை அனுப்பிப் பேச வைப்பான். இப்படியாகத் தன்னால் அடிமையாக்கி வைத்துக் கொள்ளப்பட்ட தமிழனைப் பார்ப்பான் எப்படியும் புகழ்ந்து உயர்த்திக் காட்டுவான். அப்படி உயர்த்திக் காட்டித் தனக்குத் தன் இனத்திற்கு உழைப்பவனாக ஆக்கிக் கொண்ட ஒருவர் தாம் கண்ணதாசன். கண்ணதாசனை எப்பொழுதும் அவாள்கள் மாதொருபாகனாக (அர்த்தநாரீசுவரன்) ஆக்கி வைத்திருந்தனர்.

எழுத்துக் குப்பை

கண்ணதாசன் தமிழ் இனத்தை அடிமைப்படுத்தப் பார்ப்பனர்களுக்கு மன நிறைவை உண்டாக்க எழுதித் தள்ளிய குப்பை நூல்தான் ‘‘அர்த்தமுள்ள இந்து மதம்’’

இந்து மதத்தில் அப்படி என்ன அர்த்தம் இருக்கிறது? வேறு மதங்களில் ‘அர்த்தம்’ இல்லையா? புத்த மதத்தில் ‘பொருள்’ இல்லையா? இசுலாம் மதத்தில் ‘பொருள்’ இல்லையா? கிறித்துவ மதத்தில் பொருள் இல்லையா? இந்து மதக் கயவர்களே உங்கள் மதம் தானே தமிழர்களைச் ‘சூத்திரர்கள்’ ஆக்கி வைத்திருக்கிறது. எந்த மதத்தில் உங்கள் மதத்திற்குரிய நூற்றுக்கணக்கான சாதிப் பிரிவுகள் இருக்கின்றன?

இந்து மதத்தையும் இந்து மதத்தின் கயமையையும் நாங்கள் விளக்கிப் பேசித் தமிழினத்தை மீட்க உழைத்தால். உடனே எங்களுக்குப் பிரிவினைக்காரர்கள் என்று பட்டம் சூட்டுகின்றீர்கள். யார் பிரிவினைக்காரர்கள்? கோடிக்கணக்கான ஓரின மக்களை இவன் பறையன். இவன் பள்ளன், இவன் முதலி, இவன் கவுண்டன் என்று கூறு கூறாகப் பிரித்துப் போட்டு, இவனோடு பழகாதே, இவனோடு உறவு வைத்துக் கொள்ளாதே. இவனைவிட நீ உயர்ந்தவன், இவனைவிட நீ தாழ்ந்தவன் என்று உயர்ந்த ஒரு மக்களினத்தைப் பிரித்துப் போட்ட நீ பிரிவினைக்காரனா? ஒரு மொழி, ஓர் இனம், ஒரு

(8-ஆம் பக்கம் பார்க்க)

“தென்மொழி”
சென்னை—5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ். ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம்	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ்	1.25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2.50 மேனி முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

அமைச்சர் ‘தென் மொழி’’ சென்னை—5.

யார் பிரிவினைக்காரர்கள்?...

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பண்பாடு ஒரு நாகரிகம் என்னும் பெயரில் மக்களினத்தை இணைக்கின்ற நான் பிரிவினைக்காரனா? யாரை ஏய்க்கின்றீர்கள்! இனியும் இந்தப் பிரிவினைப் பேச்சும் மிரட்டலும் பயனளிக்க மாட்டாது. மக்களுக்குப் பயன்படுகின்ற வினைகளை உருப்படியாக என்ன செய்தீர்கள்?

பயன்படாத சட்டங்கள்

மக்களுக்கென்று நீங்கள் போட்ட சட்டங்கள் என்ன ஆயின. போட்ட சட்டங்கள் பயனை விளைத்திருக்குமாயின் நாட்டில், வறுமை இருந்திருக்குமா? சாலை ஓரத்துச் சாக்கடையில் மக்கள் புழுக்களாய் நெளிந்து சாவார்களா? ஒவ்வொரு ஆண்டும் பாடத் திட்டத்தை மாற்றவில்லையா? மூன்று ஆண்டுக்கு முன் படித்த பாடத்தைப் பழைய பாடம் (Old Sylabus) என்று திருத்திக் கொள்ளும் நீங்கள் மக்களுக்குப் பயன்படாத சட்டங்களைக் குப்பைத் தொட்டியில் எறிந்தாலென்ன?

சிங்கப்பூருக்கு நான் சென்றிருந்தபோது அந்த நாட்டின் சிறப்பைக்கண்டு வியந்தேன். அப்பொழுது அந்த நாட்டு அலுவலகங்களின் சுவர்களை என் கண்கள் துழாவின. அன்பர்கள் என்ன தேடுகின்றீர்கள் என்றனர். இவ்வளவு சிறப்பாக இந்த நாட்டை அமைத்து ஆளுகின்ற தலைமை அமைச்சரின் ஒளிப்படத்தைத் (Photo) தேடுகின்றேன் என்றேன். அதற்கு அவர்கள் ''எதற்கு அலுவலகங்களில் இந்த நாட்டுத் தலைமை அமைச்சரின் படம் மாட்ட வேண்டும். அவ்வாறு எங்கும் நாங்கள் அப்படி மாட்டுவதில்லை. அப்படி மாட்ட வேண்டும் என்ற உத்திரவும் எங்களுக்கு இல்லை. எங்களுக்கு எதற்கு அவரின் படம்? ஒரு தாய்க்கு அன்றோ தான் பெற்ற மக்களைப் பற்றிய நினைவு இருக்க வேண்டும்!' என்று விடை கூறினர்.

நம்நாட்டை நினைத்துப் பாருங்கள்! சுவரின் அளவை வைத்துக்கொண்டு அதன் நீள அகலங்களுக்கேற்ப அடித்து ஒட்டிக் கொள்ளும் பெரிய பெரிய சுவரொட்டிகள்!, எங்குப் பார்த்தாலும் இந்திரா காந்தி! எங்குப் பார்த்தாலும் எம், சி, ஆர்.. எண்ணிப் பார்க்க வேண்டும்! ஆரவாரங்களும் அச்சடித்த சுவரொட்டிகளும் மக்களை ஈடேற்ற முடியுமா? இவை தாம் அரசியலா? அரசியல் என்பது ஒட்டு மொத்தமாக மக்களின் வாழ்வியல் கட்டுமானம் என்பதை என்றுவது நாம் பின்பற்றி இருக்கின்றோமா?

மனம் கெடாதா?

மேலாடையில்லாது பெண்ணொருத்தி தெருவில் நடந்து போவாளானால் அவளைக் காவலர்கள் உடனே தளைப்படுத்தி அழைத்து வந்து வழக்குப் போடுவர். பொது மக்களின் மனவுணர்வைக் கெடுக்கின்ற குற்றத்தை நீ செய்தாய் என்று தண்டனை கொடுப்பார்கள். ஆனால் பெண்ணொருத்தியின் உடைகளைந்த கொழுப்பு மேனியை வழுவழுப்பு அட்டைகளில் படமெடுத்துகடைக்குக்கடை தொங்க வைத்துள்ளார்கள்! திரைப் படத்தில் எல்லாம் வெளிச்சம்! சாலையில் மேலாடையில்லாமல் சென்ற பெண்ணின் செயல் மக்கள் மனவுணர்வைக் கெடுக்கும் என்றால் இதழ்களிலும் திரைப் படத்திலும் வெளிப்படுத்தும் படங்களால் மனம் கெடாதா?

நாங்களும் காவலர்கள்தாம்!

காவலர்கள் எண்ணவேண்டும். இந்த நாட்டின் காவலர்களும் காவல் துறை அதிகாரிகளும் எங்கே மதிக்கப்படுகின்றனர்? அமைச்சர்களை வரவேற்கவும் வணங்கவும் அவர்களுக்கு கையாட்களாகவும் அன்றோ பயன்படுத்தப்படுகின்றனர். மக்களின் நலனுக்கென்று மக்களின் வரிப் பணத்தால் இயங்கும் காவலர்களும் இக்கொடிய அரசியலால் குலை நடுங்குகின்றனரே! அருமைக் காவலர்களே! நீங்கள் மட்டுமேதான் காவலர்களா! நாங்களும் கர்வலர்கள்தான்! நாங்கள் மொழிக் காவலர்கள், இனக் காவலர்கள் பண்பாட்டுக் காவலர்கள்.

தமிழினம் இன்று புறப்பூசாலும் உட்பூசாலும் அலைக்கழிக்கப்படுகின்றது உலகத்தமிழின முன்னேற்றக் கழகம் தமிழினத்தின் நலங் கருதித் தோற்றுவிக்கப்பட்ட ஓர் உண்மை உழைப்பியக்கம். தமிழர்களும் தமிழினத் தலைவர்களும் அகப்பூசலை விட்டொழித்துக் கொண்டு புறப்பூசலையும் அப்பூசலை விளைப்போரையும் தகர்த்தெறிய அணியமாக வேண்டும். அதற்குரிய நேரம் நெருங்கி விட்டது.

(திருச்சி மாவட்டக் கிளைத் தொடக்க விழாப் பொதுக் கூட்டத்தில் பாவலரேறுவின் கருத்துரை.)

தமிழர்களிடையே...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சேரவேண்டும்; சேர்க்கப் பெறுதல் வேண்டும்!

இலக்கக் கணக்கில் அச்சாகிப் படர்ந்து பரவுதல் வேண்டும்! பரப்பப் பெறுதல் வேண்டும்!

இதன் ஒவ்வோரடியும் தமிழரின் இன முன்னேற்றத்திற்குக் கட்டியங் கூறி நிற்கும்!

ஒவ்வோரிதழும், தமிழ்நில உரிமைக்கு ஒரு கைப்பிடி எருவாக உதவுதல் வேண்டும்!

இதன் உண்மை எழுச்சிக்குத் தென்மொழி அன்பர்களின் முழு உழைப்பும் பயன் பெறுதல் வேண்டும்! அனைவரும் இதன் உண்மை உழைப்பில் பங்கு பெறுதல் வேண்டும்!

இஃது ஓர் எளிய முயற்சியன்று! அரிய முயற்சி! அரிதினும் அரிய பாடு! இதனை எல்லாரும் கட்டிக் காத்துக் கொள்ளுதல் வேண்டும்!

அனைவரையும் இதன் பாங்கில் கொணர்ந்து நிறுத்துதல் வேண்டும்!

இஃது உ. த. மு. கழகத்திற்குச் சொந்தமான இதழ்! இதன் வளர்ச்சி ஒவ்வொன்றிலும் அன்பர்கள் தம் பங்கை —அது சிறிய பங்காயினும்— தவறாமல், தவிராமல் இன்றே பதித்திடல் வேண்டும்!

நன்கொடைகளை வாரி வழங்குதல் வேண்டும்!

இதற்கென்று ஒரு தனி அச்சகத்தை நிறுவுதல் வேண்டும்! அதற்குக் கோடிக் கணக்கில் பணம் தேவைப்படும்! எளிதன்று தமிழின உரிமை மேம்பாடு!

அனைத்தும் அன்பர்களின் பெருமுயற்சியால் வந்து குவிந்திடல் வேண்டும்!

நன்கொடைப் பட்டியல் முதல் இதழிலிருந்தே தொடங்குகிறது! உங்கள் பெயரும் உள்ளமும் அதில் பளிச்சிடல் வேண்டும்! ஈட்டத்தை, உங்கள் கைகளால் வாரி வீசுங்கள்! இயலாதவர்கள் அள்ளிப் போடுங்கள்! அதுவும் இயலாதவர்கள் கிள்ளிக் கொடுங்கள்! அதையும் செய்ய முடியாதவர்கள் வாங்கிப் படியுங்கள்! அதையும் ஆற்ற வாய்ப்பற்றவர்கள் வாயார வாழ்த்துங்கள்! நெஞ்சார வாழ்த்த நினையுங்கள்!

'தமிழ் நிலம்' உங்கள் இதழ்! உங்கள் சொத்து! உங்களுக்கு உரிமை வாங்கித் தரும் படைக்கலம்!

உங்கள் கருத்துகள் அனைத்தும் இதில், இனி, இடம் பெறும்!

வாழ்க உங்கள் தமிழ்நிலம்!

—(தென்மொழி சு19, ஒ-2.

'தமிழ் நிலம்' இதழை வாழ்த்தி வரவேற்கும் நெஞ்சங்கள்!

தமிழர்களுக்கு உண்மை உணர்த்த ஓர் ஏடு

தமிழர்களுக்கு உண்மைகளைத் தெரிவித்து உணர்வூட்ட ஏடொன்று இல்லையே என ஏங்கினேன். 'தமிழ் நிலம்' பற்றிய அறிவிப்பு வந்துள்ளது! வாழ்க! வளர்க!!

ப. பத்மநாபன் க.மு., ச. இ.
சோமனூர்

விழாவிற்கு வருவேன்

ஐயா, 'தமிழ் நிலம்' வெளியிடுவது தொடர்பான மடல் கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி, விழாவிற்கு வருவேன்.

கு. வெ. கி. ஆசான்
கோவை

கழகக் குரல் ஒலிக்க முதல் படை

கழகத்தின் குரல் ஒலிக்க முதல் படையாகத் தமிழ் நிலம் இவ்வளவு விரைவாக அணியமானது தமிழர்களின் பெரும்பேறு.

கு. ச. ஆனந்தன்
கோபி செட்டி பாளையம்

புதிய பாதையைச் சமைக்கும்

தமிழ் நில வெளியீட்டு முடிவு, தமிழக வரலாற்றை மாற்றும் புதிய பாதையைச் சமைக்கும் என நம்புகிறேன். என் வாழ்த்தும் வரவேற்பும்.

க. ப. அறவாணன்
சென்னை-29.

ஒப்படைக்கின்றேன்

தங்கள் எண்ணம், சொல், செயலால் தாங்கள் ஆற்றி வரும் உண்மைத் தொண்டிற்கு . என் உணர்வை, உடலை, உயிரையே ஒப்படைக்கின்றேன்.

நாரா மகிழ்நன்,
திருச்சி-14.

இருகையேந்தி வரவேற்கின்றனர்

முதன் முதலில் 'தென்மொழி'யைப் பார்த்தபோது உண்மைத் தமிழ் நெஞ்சங்கட்கு ஏற்பட்ட உணர்வு எழுச்சி இன்று 'தமிழ் நிலம்' வருகையால் இரட்டிப்பாகின்றது. எண்ணிய எண்ணியாங்கு நடத்திக் காட்டும் ஐயா (பாவலரேறு) அவர்களை வழிகாட்டியாக—முதல்வராக—ஏற்று நல்வுள்ளங்கள் இன்று நடையிடத் தொடங்கி விட்டன! அக்கொள்கை மறவர்கள் தங்களின் இயக்கமான 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் போர்வாளாக, கேடயமாக வெளியிடப் பெறும் தமிழ்நிலத்தைப் பெருமகிழ்வோடு இருகையேற்று வரவேற்கின்றனர். ஆம்! தமிழின விடிவிற்கான அடுத்த கட்டப பணி முடுக்கமாகச் செயல்படத் தொடங்கி விட்டது!

தென்மொழி தமிழநம்பி
—விழுப்புரம்

என் கடமை தூய்மையானதாக இருககும்

கழகத்தின் கட்டளைப்படி என் கடமையாற்றுதல் என்றும் தூய்மையானதாக இருக்கும்.

—மா.செ. தமிழ்மணி
வேட்டாங்குளம்

அன்பர்கள் கவனிக்க...

கழக முதல்வர் அவர்களை வந்து காணவும். கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

—அமைச்சர்

கிருட்டிணா நீர்த் திட்டத்தை ...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கக்கூடிய திட்டம். உலக வைப்பக ஆய்வுக் குழுவினர் இத்திட்டத்தைப் பாராட்டி இருப்புக் குழாய் பதிக்க இசைந்தால் உதவுவதாக உறுதி மொழிந்திருக்கின்றனர்.

திட்டம் வகுத்தவர் எவர்? செயற்படுத்தத் தொடங்கியவர் யாவர் என்பனவல்ல இன்று நம் முன் உள்ள சிக்கல். சரியான திட்டம் செயற்பட வேண்டும் என்பதே நம் வேட்கையும் நோக்கமும் ஆகும். உலக வைப்பக ஆய்வுக் குழுவினரின் கூற்றைச் சுட்டிக் காட்டி, வீராணந் திட்டத்தைப் புறக்கணித்ததையுங் கண்டித்து, இனியேனும் அதை நிறைவேற்றுமாறு மேனாள் முதலமைச்சரும் ஆட்சி வல்லுநருமான பத்தவச்சலம் அவர்கள்கூட அறிவுறுத்தியிருப்பது கவனிக்கத் தக்கது.

ஆறுகள் தேசியமயமாக்கப்பட்டாலொழியக் கிருட்டிணா நீர்த் திட்டம் என்று பேசுவது கூடப் பொருத்தமற்றதே! தேசியத் திட்டமாகக் கிருட்டிணா நீர் வந்தால் வரட்டும். அதற்காக நாம் அங்காந்து நிற்கவோ அக்கறை கொள்ளவோ வேண்டாம்.

தமிழ்நாடு தன்னிறைவு பெறும் வகையில் வீராணந் திட்டத்தை மறுஆய்வு செய்வதிலும், பொறியியல் வல்லுநர் திரு. கே. ஆர். மூர்த்தி அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கும் ஓகியான் மதகு, புலிக்கேட்டு நீர் நிலைகளை உருப்படுத்தும் திட்டங்களை ஆய்வு செய்து விரைந்து நடவடிக்கை எடுப்பதிலும் நாட்டம் செலுத்துங்கள்! நீண்டகாலமாகக் கோரை மண்டி மேடு தட்டிக் கிடக்கும் நீர்நிலைகளை ஆழப்படுத்திக் கரைகளை உயர்த்துவதிலும் அக்கறை செலுத்துங்கள்!

தமிழ்நிலத்திற்கு நன்கொடை

தமிழ்நிலம் வளரவும் வாழவும் ஆர்வங்கொண்ட அன்பர் பலர் தாமே முன் வந்து நன்கொடை நல்கியுள்ளனர். அவர்களின் கடமையுணர்விற்கு அகங்கனிந்த நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் இவ்வார்வலர் வரிசையில் அனைவரும் பங்குகொள்ள வேண்டுகிறோம்.

(10-10-'82 முதல் 25-10-'82 முடிய)

பர். ஆறிறைவன், சென்னை-36.	100—00
சு. பாலச்சந்திரன், சிதம்பரம்.	2—00
செம்பியன் வல்லத்தரசு, சென்னை-7.	10—00
செ. கண்ணன், சென்னை-5.	10—00
வண்ணக்குமரன், சென்னை-5.	5—00
துரை. தென்னவன், சென்னை-19.	5—00
மா. ஆறுமுகம், பல்லடம்.	1000—00
ந. முத்துக்குமரன், பல்லடம்.	1000—00
த. கரிகாலன், கடையநல்லூர்.	10—00
தமிழன்பன், ,,	10—00
இரா. பாண்டியன் ,,	10—00
தாய. அன்பறிவன் ,,	10—00
இப்பாரரசு ,,	10—00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர்: 'தென்மொழி' அச்சகம், சென்னை-5.